REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஓகஸ்ட் 13 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 92 இல. 192 | Tuesday 13, August, 2024 | 16பக்கங்கள் | 50/-




## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதியளித்தபடி

# தோட்ட தொழிலாளர்களது சம்பளம் ரூ.1700 ஆக உயர்வு



## சம்பள நிர்ணயசபை பேச்சுவார்த்தையில் இறுதித் தீர்வு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1700 ரூபா வழங்குவதற்கு சம்பள நிர்ணய சபையில் நேற்று (12) தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நேற்றைய அமர்வில் மேற்படி தீர்மானத்தை நிறைவேற்றுவதற்காக வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இந்த வாக்கெடுப்பில் சம்பள அதிகரிப்புக்கு ஆதரவாக 14 வாக்குகளும் எதிராக 03 வாக்குகளும் அளிக்கப்பட்டன. மூன்று தோட்டக் கம்பெனிகளே இந்த வாக்கெடுப்பின்போது எதிர்த்து வாக்களித்துள்ளன.

இதற்கிணங்க தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் 1350 ரூபா என்றும் வருகைக்கான ஊக்குவிப்பு விசேட கொடுப்பனவு 350 ரூபா என்றும் தீர்மானிக்கப்பட்டு இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

வாக்கெடுப்பில் சம்பள நிர்ணய சபை, முதலாளிமார் சம்மேளனம், தொழில் ஆணையாளர் உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

சம்பள அதிகரிப்புக்கு மேலதிகமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் தோட்டத் தொழிலாளர்களுக்கு 08 பேர்ச்சஸ் வீட்டுக்கான உறுதிப் பத்திரத்தை வழங்குவதற்கும் தோட்டத் தொழிலாளர்கள் வாழும் பிரதேசங்களை கிராமங்களாக்குவதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று ஓய்வு பெற்ற தொழிலாளர்களின் வீடுகளுக்கு உறுதிப்பத்திரம் வழங்குவதற்கும் தோட்டப்புறங்களில் வாழும் இளைஞர் யுவதிகள் 2300 பேருக்கு ஆசிரியர் உதவியாளர்களாக நியமனம் வழங்குவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

06

## நீதி, சிறைச்சாலை அமைச்சராக அலிசப்ரி சத்தியப்பிரமாணம்



நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சராக ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். இந்நிகழ்வு நேற்று (10) காலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. வெளிவிவகார அமைச்சராக தற்போது பதவி வகிக்கும் அலிசப்ரிக்கு, மேலதிகமாக நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பதவியும் வழங்கப்பட்டுள்ளது.




03

முன்னாள் அமைச்சர்களான

### ஹரீன், மனுஷ வெற்றிடங்கள் தேர்தல் ஆணையாளருக்கு அறிவிப்பு

தோட்டத் தொழிலாளர் ரூ.1700 சம்பள உயர்வு;

## ஜனாதிபதியின் நடவடிக்கைக்கு ஜீவன், செந்தில், சுரேஷ், நன்றி தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆகியோருக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாக, அமைச்சர் ஜீவன் தொண்டமான், கிழக்கு மாகாண

06

## ஜனாதிபதியின் முதலாவது மக்கள் பேரணிக் கூட்டம் அநுராதபுரத்தில்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதித் தேர்தலில் சுயாதீன வேட்பாளராக போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்கான முதலாவது தேர்தல் மக்கள் பேரணிக் கூட்டம் எதிர்வரும் (17) அநுராதபுரம் சல்காது விளையாட்ட ரங்கில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு

06

## ஓய்வூதியர்களுக்கான 3000 ரூபா அக்டோபரில் வழங்க நடவடிக்கை

### செப்டம்பர் நிலுவையுடன் கொடுப்பனவுகள்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஓய்வூதியக்காரர்களுக்கு வழங்கப்படும் 2500 ரூபா கொடுப்பனவுடன் அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்ட மேலும் 3000 ரூபாவையும், எதிர்வரும் அக்டோபர் மாதம் முதல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அண்மையில் அமைச்சரவையில் யோசனை சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட தீர்மானத்திற்கிணங்க,

06



03

### அதிகமான அரசியல் கட்சிகள் ஜனாதிபதியுடன் கூட்டுச்சேர முடிவு

## அநுர குமார வேட்பாளர் வேட்புமனுவில் கையொப்பம்



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க நேற்று (12) வேட்பாளர் வேட்புமனுவில் கையொப்பமிட்டார்.கட்சியின் தலைமை அலுவலகத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது. தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் வைத்தியர் நிஹால் அபேசிங்க, மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா உள்ளிட்ட தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர்கள் சிலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

## காங்கேசன்துறை–நாகபட்டினம் கப்பல்சேவை வெள்ளி ஆரம்பம்



காங்கேசன்துறை - நாகப்பட்டினத்திற்கிடையிலான கப்பல் சேவை எதிர்வரும் (16) வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

"இந்தோலங்கா" கப்பல் சேவை நிறுவனத்தின் நிர்வாக பணிப்பாளர் எஸ். நிரஞ்சன் நந்தகோபன் இது குறித்து தெரிவித்துள்ளார்.

'சிவகங்கை' பயணிகள் கப்பல் இரு நாடுகளுக்கும் இடையே படகுச் சேவையை மீண்டும் ஆரம்பிக்க உள்ளதாக அவர் தெரிவித்தார். இதனை முன்னிட்டு நாகப்பட்டினம் துறைமுகத்தில் இணையவழி

06

## ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளராக இம்தியாஸ்



ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளராக பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் நியமிக்கப்படவுள்ளார். பீல்ட் மார்ஷல் சரத்

06

## வேட்புமனு தாக்கல் தினத்தில் தேர்தல் செயலகப் பிரதேசங்கள் பாதுகாப்பு வலயமாக பிரகடனம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் தினத்தில் (15) தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகம் அமைந்துள்ள இராஜகிரிய சரண மாவத்தை மற்றும் அதனை அண்டிய பிரதேசங்கள் விசேட பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்படவுள்ளது. இதைக்கருத்திற்கொண்டு அன்றைய தினம்

06

## கொழும்பு–கண்டி வீதியில் கோர விபத்து: மூவர் பலி

### மூவர் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பு கண்டி பிரதான வீதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் எட்டு மாத குழந்தை உட்பட மூவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கொழும்பு கண்டி வீதியில்

06

## 18 வயதைக் கடந்துள்ள ஐந்து லட்சம் பேருக்கு TIN இலக்கம் விநியோகம்

### 255194 வரிக் கோவைகள் இந்த வருடத்தில் புதிதாக ஆரம்பம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் 18 வயதைக் கடந்துள்ள சுமார் ஐந்து பில்லியன் பேருக்கு வருமான வரிக் குறியீட்டு இலக்கம் (TIN) விநியோகிக்கப்பட்டுள்ளதாக தேசிய இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பாராளுமன்றக் கட்டடத்தில் இடம்பெற்றுள்ள முறைமை மற்றும் விதிமுறைகள் தொடர்பான தெரிவுக் குழுவில் தேசிய வருமான வரி திணைக்களத்தின் வருமானம் தொடர்பான முன்னேற்றம் சம்பந்தப்பட்ட பேச்சுவார்த்தையில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் 255194 வரிக் கோவைகள் இந்த வருடத்தில்

06

## ஆதரிக்கும் வேட்பாளரை தீர்மானிப்பதில் தடுமாற்றம்

### உச்சக்கட்ட மோதலில் தமிழரசுக்கட்சி

ஜனாதிபதி தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் தீர்மானிப்பதற்கு கூடிய இலங்கை தமிழரசுக்கட்சியின் கூட்டம் அமளிதுமளியில் முடிந்தது. இக்கூட்டம் வவுனியாவில் (11) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில், எதிர்வரும் ஜனாதிபதித் தேரதலில் எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்பது குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது. கடுமையான

06

## அரியநேத்திரன் சார்பாக கட்டுப்பணம் செலுத்தல்



ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக போட்டியிடும் பா. அரியநேத்திரன் சார்பாக கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது. மக்கள் கூட்டணியின் மத்திய குழு உறுப்பினரான, த.சிற்பரன் இவருக்கான கட்டுப்பணத்தை செலுத்தினார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர்

06

## அரச நிறுவனங்களிடமிருந்து 92 பில்லியன் ரூபா வரி அறவீடு

### எஞ்சிய ரூ. 724 பில்லியனை அறவிடவும் உத்தரவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்க நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 29 பில்லியன் ரூபா நிலுவையை, அறவிடுவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பாராளுமன்ற வழிவகைகள் தொடர்பான குழு, இறைவரித் திணைக்களத்தை அறிவுறுத்தியுள்ளது. பாராளுமன்ற கட்டடத்தில் இடம்பெற்ற தேசிய வருமான வரி திணைக்களத்தின்

06

## ஜனாதிபதி தேர்தல்: வேட்பாளர் எவரையும் ஆதரிக்கவில்லை



ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் எந்த ஒரு வேட்பாளருக்கும் ஆதரவு வழங்கப்போவதில்லை என, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். அத்தனகல்ல தொகுதியில் செயற்படும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களு டன் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் இவ்விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

நிட்டம்புவ ஹொரகொல்ல பண்டாரநாயக்க ஞாபகார்த்த நூலக வளாகத்தின் முதல் மாடியிலுள்ள கேட்போர் கூடத்தில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

06

# லயன் அறைகளில் வாழும் மக்களுக்கு கிராமத்தில் வாழும் உரிமை வழங்கப்படும்



## இலங்கை வரலாற்றில் முதன்முறையாக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கை

நாட்டின் வரலாற்றில் முதல் தடவையாக லயன் அறைகளில் வாழும் மக்களுக்கு கிராமமொன்றில் வாழ்வதற்கான உரிமை வழங்கப்படும் எனவும், அதற்காக தோட்டக் கம்பனிகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ள லயன் அறைகள் இருக்கும் காணிகளின் குத்தகை ஒப்பந்தங்கள் ரத்துச் செய்யப்பட்டு அந்தக் காணிகளை அரசாங்கம் மீளச் சுவீகரிக்கும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மக்களுக்கு காணி உரிமை வழங்கப்படும் எனவும், வீடுகளை நிர்மாணிப்பதற்கு அரசாங்கம் உதவியளிக்கும் எனவும் தெரிவித்த ஜனாதிபதி, அவற்றுக்கு அண்மித்த பகுதிகளில் விளையாட்டு மைதானம் போன்ற பொதுஇடங்களை உருவாக்கக் கூடிய காணிகளை அரசாங்கம் சுவீகரிக்கும் எனவும்



குறிப்பிட்டார்.

நுவரெலியா மாவட்ட வர்த்தகர்களுடன் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற சந்திப்பில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

நுவரெலியா வர்த்தக சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்பட்டதுடன், பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பான பல யோசனைகளையும் அவர்கள் முன்வைத்தனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சரியான வேலைத்திட்டத்துடன் நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது பூரண ஆதரவை வழங்குவதாக அங்கு கூடியிருந்த நுவரெலியா மாவட்ட வர்த்தக சமூகத்தினர் ஜனாதிபதியிடம் உறுதியளித்தனர்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் மஸ்கெலியா தொகுதி அமைப்பாளருமான கே. கே. பியதாச, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் டபிள்யூ. ஜி. ரணசிங்க, ஹட்டன்_ டிக்கோயா முன்னாள் நகரபிதா எஸ். பாலச்சந்திரன், ஹட்டன் வர்த்தக சங்கச் செயலாளர் எஸ். சோமசுந்தரம் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.



இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நுவரெலியா மாவட்ட கல்விசார் நிபுணர்கள் மற்றும் தொழில் வல்லுனர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்றும் அன்றைய தினம் நுவரெலியாவில் இடம்பெற்றது.

நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் நிலையில், அதனை மாற்ற இடமளிக்க முடியாது எனத் தெரிவித்த நுவரெலியா மாவட்ட கல்விசார் நிபுணர்கள், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவது நாட்டை நேசிக்கும் அனைவரினதும் பொறுப்பு எனச் சுட்டிக்காட்டினர்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, மலையகத் தமிழ் மக்களுக்கு சமூக நீதியை நிலைநாட்டுவதற்காக அடுத்த வருடம் ஜனவரி அல்லது பெப்ரவரி மாதத்தில் மாநாடொன்று கூட்டப்படும் எனக் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தினால் ஸ்தாபிக்கப்படவுள்ள சமூக நீதி ஆணைக்குழுவில் தமிழ் மக்களின் சமூகப் பிரச்சினைகளை விரிவாக ஆராய சந்தர்ப்பம் கிடைக்கும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நுவரெலியா மாவட்ட தொழிலதிபர்களினதும், தொழில் வல்லுநர்களினதும் பிரச்சினைகள் ஜனாதிபதியிடம் முன்வைக்கப்பட்டதுடன், அதற்கான தீர்வுகள் அடங்கிய பிரேரணையும் முன்வைக்கப்பட்டது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் பாராளுமன்ற உறுப்பினமான வடிவேல் சுரேஷ் இந்த நிகழ்வில் உரையாற்றியதோடு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அன்று முதல் பெருந்தோட்ட மக்களுக்காக பல பணிகளை செய்துள்ளதோடு, அந்த மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதில் அவர் எதிர்காலத்திலும் அர்ப்பணிப்புடன் செயற்படுவார் எனச் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில் நுவரெலியா மாவட்ட இந்து பூசகர்கள் குழுவின் தலைவர் வேலு சுவிஸ்வர சர்மா மற்றும் தொழில் வல்லுனர்கள் குழுவினர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## நுவரெலியா மாவட்ட வர்த்தக சமூகத்தினர் மற்றும் கல்விசார் நிபுணர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி தெரிவிப்பு



# முன்னாள் உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் அமைப்பு ஜனாதிபதிக்கு முழுமையான ஆதரவு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ள மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் மக்கள் பிரதிநிதிகள் அனைவரினதும் அரசியல் எதிர்காலம் பாதுகாக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கண்டி ஓக் ரே ரீஜென்சி ஹோட்டலில் கடந்த 10 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முன்னாள் உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள்அமைப்பின் விசேட கூட்டத்தில் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.



நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காக ஜனாதிபதி ஆரம்பித்துள்ள வேலைத்திட்டத்தை பாராட்டிய முன்னாள் உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதியின் வெற்றியை உறுதிப்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் எனவும் உறுதியளித்தனர். முன்னாள் உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் அமைப்பின் பரிந்துரைகள் அடங்கிய ஆவணமும் இதன்போது ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க ஒன்றிணைந்துள்ள பொதுஜன பெரமுன அணி அடுத்த வாரத்திற்குள் புதிய கட்சியை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே இதன்போது அறிவித்தார்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, இராஜாங்க அமைச்சர்களான லொஹான் ரத்வத்தே, அனுராத ஜயரத்ன, ஜானக வக்கும்புர, முன்னாள் அமைச்சர் மனுஷ நாணாயக்கார உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கு உறுதி



# சமூகநலனிலும் மொழி வளர்ச்சியிலும் எழுத்தாளர்களின் பங்களிப்பு அவசியம்

## பிரிஸ்பேர்ன் நூல் வெளியீட்டில் தாமரைச்செல்வி உரை

அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேர்னில் உள்ள மவுண்ட் ஒமாணி நூலக (Mt Ommaney Library) மண்டபத்தில் கடந்த வாரம் பாலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல், இலங்கை இதழியலில் சிவகுருநாதன் ஆகிய ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்களின் வெளியீடு சிறப்புற நடைபெற்றது.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் வாழ்த்துரையை ஈழத்தின் மூத்த பெண் எழுத்தாளர் 'தாமரைச் செல்வி' திருமதி. ரதிதேவி கந்தசாமி ஆற்றினார். அத்துடன் தமிழ் வாழ்த்துப் பாடலை பிரிஸ்பேர்ன் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் சிறப்புற பாடினர். "சமூகப் பார்வையுள்ள எழுத்தாளர்களை தமிழ் உலகம் உத்வேகப்படுத்த வேண்டும். சமூக நலனிலும் மொழி வளர்ச்சிக்கும் எழுத்தாளர்கள் தங்கள் பங்களிப்பை வழங்க வேண்டும். இதன் மூலமே நல்லதோர் எதிர்கால சந்தியினரை உருவாக்க முடியும்" என எழுத்தாளர் தாமரைச்செல்வி குறிப்பிட்டார்.





வன்னி பகுதியைச் சேர்ந்த எழுத்தாளர் தாமரைச்செல்வி ஐம்பது ஆண்டுகால எழுத்தூழியப் பணியில் தன்னை ஈடுபடுத்தியுள்ளார். இந்நிகழ்வில் அவர் உரையாற்றுகையில் "ஓர் எழுத்தாளனின் வாழ்வியல் வெற்றியானது அவனது எழுத்தை எதிர்கால சந்ததியினரும் அறிந்து உணர்ந்து படிப்பதிலேயே தங்கியுள்ளது" எனக் குறிப்பிட்டார்.

1973 முதல் சிறுகதைகளையும் பல புதினங்களையும் எழுதிவரும் தாமரைச்செல்வி ஒன்பது நூல்களை வெளியிட்டுள்ளார். இவருக்கு இலங்கையின் தேசிய சாகித்திய விருதும் கிடைத்துள்ளது.

அவுஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தின் 2023 வருடாந்த தமிழ் எழுத்தாளர் விழாவில் இலக்கியப் படைப்பாளி தாமரைச் செல்வியின் ஐம்பது ஆண்டுகால எழுத்தூழியப் பங்களிப்பை பாராட்டி வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி அவர் கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வின் தலைமையுரையை அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், குயின்ஸ்லாந்து கிளையின் மூத்த செயற்பாட்டாளர் செந்தில் குமரன் ஆற்றினார்.

பின்னர் 'பாலஸ்தீனம் எரியும் தேசம்' நூல் அறிமுகவுரையை இலக்கிய ஆர்வலர் சிவா கைலாசம் நிகழ்த்தினார்.

'ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல நூலின் அறிமுகவுரையை டொக்டர் துஷ்யந்தன் திசைநாயகம் ஆற்றினார்.

'இலங்கை இ தழியலில் சிவகுருநாதன்' நூலின் அறிமுகவுரையை ரஜினிகாந்த் ஜெயராமன் ஆற்றினார்.

அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், குயின்ஸ்லாந்து கிளையின் அனுசரணையில் நடைபெற்ற

இந்நூல்கள் வெளியீடும் இலக்கிய அரங்கில் பெருந்திரளான பிரிஸ்பேர்ன் வாழ் தமிழ் மக்கள் கலந்து கொண்டனர். நிகழ்வின் இறுதியில் ஏற்புரையை நூலாசிரியர் ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்தினார்.

# அதிகமான அரசியல் கட்சிகள் ஜனாதிபதியுடன் கூட்டுச்சேர முடிவு



அதிகளவிலான அரசியல் கட்சிகள் அடுத்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கூட்டணி அமைக்கவுள்ளதாக, ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.இதனால் அடுத்த வாரம் மிகவும் முக்கியமானதாகவும், ஊடகங்களின் கவனம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நோக்கித் திரும்பும் வாரமாக அமையும் என்றும் அவர் கூறினார்.

காலி மாவட்டத்தின் அனைத்து தேர்தல் தொகுதிகளையும் உள்ளடக்கிய விசேட கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே, வஜிர அபேவர்தன இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அமைச்சர் ரமேஷ் பத்திரன, பாளுமன்ற உறுப்பினர் சம்பத் அத்துகோரள, முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகம ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# கைத்தொழில் துறை வருமானம் அதிகரிப்பு

வீழ்ச்சிகண்டிருந்த நாட்டின் கைத்தொழில் துறை, தற்போது படிப்படியாக வளர்சியடைந்து வருவதாக சமீபத்திய உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர், காலியாகவிருந்த அந்நியச் செலாவணிக்கு பெரும் பங்களிக்கும் துறையாக

கைத்தொழில்துறை அமைந்துள்ளதாகவும் இந்த புள்ளிவிபரங்களில் காணக்கூடியதாகவுள்ளது.

தொழில்துறை உற்பத்தி குறியீட்டு எண் ஜூன் மாதம் 93.0 ஆக, பதிவாகியுள்ளது. ஒரு வருடத்திற்கு முன்பு இருந்ததை விட 3.3 சவீத அதிகரிப்பை இது காட்டுகிறது.

தொழில்துறை நடவடிக்கைகளின் இந்த மீட்சியானது உள்நாட்டில் உள்ள தேவையை பிரதிபலிக்கின்றது. அதிகரித்து வரும் நுகர்வோர் செலவினங்களை கவனத்தில் கொள்ளும் போது, சர்வதேச அளவில் ஜவுளி மற்றும் ஆடைத் தொழில்துறை ஏற்றுமதியும் அதிகரித்துள்ளது.2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் நாட்டின் பணவீக்கத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த மக்களின் உணவு நுகர்வும் அதிகரித்துள்ளதை உணவுப் பொருட்களுக்கான தேவை அதிகரிப்பு மூலம் காணக்கூடியதாக உள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உணவு ஏற்றுமதியும் ஒப்பீட்டளவில் தற்போது வலுவான நிலையில் உள்ளது. கடந்த ஜூன் மாதத்தில், உணவு, பானங்கள் மற்றும் புகையிலை ஆகியவற்றின் ஏற்றுமதி வருமானம் 28.2 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதன் ஊடாக 51.7 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் பெறப்பட்டுள்ளது.

இந்த காலப்பகுதியல் முதல் ஆறு மாத வருமானம் 312.6 மில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்பட்டது.

# தினகரன் 92 வருடங்களுக்கு முன் தினகரன்

## இன்று 13 ஓகஸ்ட் 1932



மேனட்டுத் தொடர்பின் அனுகூலங்கள்

இலங்கையில் போர்த்துக்கேயர்களின் ஆதிக்கம்

திரு. பிளேசின் விரிவுரை

இலங்கையில்

போர்த்துக்கேயர்கள் 1505ம் ஆண்டு முதன்முதல் இலங்கையில் கால் வைத்தனர். அன்றுமுதல் 1640-ம் ஆண்டு வரை இலங்கையின் கரைதுறைப் பகுதிகளில் அவர்கள் குடியேறியிருந்தனர். 1640-ம் ஆண்டில் டச்சுக்காரர்கள் போர்த்துக்கேயர்களை ஜெயித்து அவர்களைவிரட்டியடித்து விட்டனர். இதிலிருந்து மேனாட்டு நாகரீகத்தை முதன்முதல் இலங்கைக்குக் கொண்டு வந்தவர்கள் போர்த்துக் கேயர்கள் என்பது அறியக் கிடக்கின்றது.

### மேனாட்டுத் தொடர்பின் அனுகூலங்கள்

இலங்கையில் போர்த்துக்கேயர்களின் ஆதிக்கம்

திரு.பிளேசின் விரிவுரை

இலங்கையில்

போர்த்துக்கேயர்கள் 1505ம் ஆண்டு முதன் முதல் இலங்கையில் கால் வைத்தனர். அன்று முதல் 1640ம் ஆண்டு வரை இலங்கையின் கரைதுறைப் பகுதிகளில் அவர்கள் குடியேறியிருந்தனர். 1640ம் ஆண்டில் டச்சுக்காரர்கள் போர்த்துக்கேயர்களை ஜெயித்து அவர்களைவிரட்டியடித்து விட்டனர். இதிலிருந்து மேனாட்டு நாகரீகத்தை முதன்முதல் இலங்கைக்குக் கொண்டு வந்தவர்கள் போர்த்துக் கேயர்கள் என்பது அறியக் கிடக்கின்றது.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)

# வருமான வரி அதிகாரிகளாக இனங்காட்டி பணம் அறவிடுவோரிடம் ஏமாற வேண்டாம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

தேசிய வருமான வரித் திணைக்கள அதிகாரிகளென தம்மை இனங்காட்டும் சிலர், வர்த்தகர்களிடம் பணம் பெற்று வருவதாக தகவல் கிடைத்துள்ளதென தேசிய வருமான வரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான நடைமுறைகள் எதுவும் இல்லை என்பதால், பணம் வழங்கி ஏமாற வேண்டாமென வர்த்தகர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.இந்த மோசடி செயல்களில் ஈடுபடுவோரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு,தேசிய வருமான வரித்திணைக்களம் பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்துள்ளது. இது தொடர்பில் வருமான வரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு பெற்றுக் கொள்ளும் பணத்திற்கு தாம், எந்த வகையிலும் பொறுப்பில்லை என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, தேசிய வருமான வரி ஆணையாளர் நாயகத்தின் கட்டுப்பாட்டின் கீழ், வரி அறவிடும் நடவடிக்கைகள் உரிய வகையில் எழுத்து மூலம் அறிவித்து உத்தியோக பூர்வமாக மாத்திரம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் வரி செலுத்துவோருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# சஜித்,பிரபாகணேசன் புரிந்துணர்வு ஒப்பந்தம்



ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்குவதற்கு

பிரபாகணேசன் தீர்மானித்துள்ளார்.

இது தொடர்பிலான உடன்படிக்கையில் ஐக்கிய மக்கள் சக்தியும் பிரபாகணேசனின் மனிதநேய மக்கள் கூட்டணியும்

இன்று (13) கைச்சாத்திடவுள்ளன. 06

# கெஸ்பேவ நகர சபை முன்னாள் உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு ஆதரவு



கெஸ்பேவ நகர சபையின் முன்னாள் தலைவர் லக்ஷ்மன் பெரேரா உட்பட 18 பிரிவுகளின் மாநகர சபை உறுப்பினர்கள் நேற்று முன்தினம் (12) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க தீர்மானித்துள்ளனர்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவிற்கு உட்பட்ட கெஸ்பேவ நகரசபையின் 20 பிரிவுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இந்த தீர்மானத்தை முன்மொழிந்தனர்.இது தொடர்பான கூட்டம் முன்னாள் தலைவர் லக்ஸ்மன் பெரேராவின் பிலியந்தல மடபாத்த இல்லத்தில் நடைபெற்றது.

கெஸ்பேவ நகர சபையின் பொதுஜன பெரமுனவின் இரண்டு மாநகர சபை உறுப்பினர்களைத் தவிர, சகலரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க முன்வந்துள்ளதாக கெஸ்பேவ நகரசபையின் முன்னாள் தலைவர் லக்ஷ்மன் பெரேரா இதன் போது தெரிவித்தார்.

இரண்டுவருடங்களுக்கு முன்னர் மக்கள் அனுபவித்த இன்னல்களை கண்டோம். இதையுணர்ந்தே

ஜனாதிபதியை ஆதரிக்கத் தீர்மானித்தோம் என்றார்.

# வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையரால் ரூபா3.71 பில்.

## இவ்வாண்டின் நடுப்பகுதி வரை வருமானம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)




வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களிடமிருந்து இவ்வாண்டின் ஜூலை மாதம் வரையிலான காலப்பகுதியில், நாட்டுக்கு 3.71 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைத்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் மாத்திரம் 566.8 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதற்கமைய 2024 ஜனவரி முதல் ஜூலை காலப்பகுதியில் மொத்தம் 3.71 பில்லியன் டொலர்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது. கடந்த வருடத்தின் இந்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இது 10.3 வீத அதிகரிப்பு எனவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

# ஹரீன், மனுஷ வெற்றிடங்கள் தேர்தல் ஆணையாளருக்கு அறிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)




முன்னாள் அமைச்சர்களான மனுஷ நாணயக்கார மற்றும் ஹரீன் பெர்னாண்டோ ஆகியோரின் பாராளுமன்ற உறுப்புரிமைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ள நிலையில், ஒன்பதாவது பாராளுமன்றத்தில் ஆகஸ்ட் (09) முதல் இரு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வெற்றிடம் ஏற்பட்டிருப்பதாக பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார் 06




உலகின் அதிசிறந்த 1000 வங்கிகளுள் இடம் பிடித்த ஒரே ஒரு இலங்கையின் வங்கி




2024 ஆம் ஆண்டிலும் பிரித்தானியாவின் The Banker சஞ்சிகையால் **உலகின் அதிசிறந்த 1000 வங்கிகளுள் தரப்படுத்தப்பட்டுள்ள ஒரேயொரு உள்நாட்டு வங்கி என்ற** பெருமையை மீண்டும் தன்வயப்படுத்திக் கொண்டது **இலங்கை வங்கி.**

தொடர்ந்தும் நம்பிக்கையுடன் எம்மோடு இணைந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

1975 BOC CALL CENTRE www.boc.lk

A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
பரிந்துரைகள்/கருத்துக்கள்/முறைப்பாடுகளுக்கு - https://www.boc.lk/contact

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

குரோதி வருடம் ஆடி மாதம் 28ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ஸபர் பிறை 07

### குறள் தரும் சிந்தனை



ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து

மன உறுதி கொண்டவர்கள் ஒழுக்கம் தவறுவதால் ஏற்படும் இழிவை உணர்ந்திருப்பதால், நல்லொழுக்கம் குன்றிடுமளவிற்கு நடக்க மாட்டார்கள்.

# ஜனாதிபதித் தேர்தலுக்காக விரிவான ஏற்பாடுகள்

ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுத்து வருகின்ற அதே நேரம், இத்தேர்தலில் பங்குபற்றுவதில் அரசியல் கட்சிகளும் சுயேச்சைகளும் அதிக அக்கறை எடுத்து செயற்பட்டு வருகின்றன.

இவ்வாறான சூழலில், இத்தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களின் கட்டுப்பணம் நாளை புதன்கிழமை நண்பகல் வரை ஏற்றுக் கொள்ளப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருக்கிறது.

இத்தேர்தலில் போட்டியிடுவதற்காக அரசியல் கட்சி சார்பில் போட்டியிடும் ஒவ்வொரு அபேட்சகரும் ஐம்பது ஆயிரம் ரூபாபடியும், சுயேச்சைக் குழு சார்பில் போட்டியிடும் ஒவ்வொரு அபேட்சகரும் 75 ஆயிரம் ரூபாபடியும் கட்டுப்பணம் செலுத்த வேண்டும்.

அந்த வகையில் ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு கடந்த ஜுலை மாதம் 26 ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டது. அதற்கேற்ப நேற்றுமுன்தினம் வரையும் இத்தேர்தலில் போட்டியிடுவதற்காக 27 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

நாளை நண்பகலுடன் கட்டுப்பணம் செலுத்துதல் நிறைவடைந்ததும் மறுநாள் 15 ஆம் திகதி வேட்பு மனுக்கள் காலை 09.00 மணி முதல் முற்பகல் 11.00 வரை தேர்தல்கள் செயலகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட இருக்கின்றன. அந்த வேட்பு மனுக்கள் தொடர்பில் ஆட்சேபனைகள் தெரிவிப்பதற்கான நேர கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது.

இத்தேர்தல் கடந்த காலத் தேர்தல்கள் போன்றல்லாது அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள தேர்தலாக விளங்குகின்றது. அதன் காரணத்தினால் இத்தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் 15 ஆம் திகதி தேர்தல் செயலகமும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களும் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டு இருக்கின்றன.

அதேநேரம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அலுவலகம் மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களின் பாதுகாப்பில் நாலாயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் ட்ரோன் கமெராக்களுடன் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். அத்தோடு விமானப் படையினரின் ஸனைப்பர் பிரிவினரும் இங்கு பணியில் ஈடுபடுவர் என்று பாதுகாப்புத் தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர். இத்தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களுக்கு விஷேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பு வழங்கவும் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ள தேர்தல் ஆணைக்குழு ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அரச நிறுவனங்கள் செயற்படும் விதம் குறித்த விஷேட அறிவுறுத்தல் சுற்றறிக்கையொன்றை அரச நிறுவனங்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், மற்றும் நியதிச் சபைகளுக்கு அனுப்பி வைத்துள்ளது.

இதேவேளை தேர்தல் நடவடிக்கைகளுக்காக அரச சொத்துக்கள் முறைகேடாகப் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதைக் கண்டறியவென விஷேட குழுவையும் இவ்வாணைக்குழு அமைத்துள்ளது. அரச சொத்துக்களின் பயன்பாடு குறித்து திடீரென அரச நிறுவனங்களுக்குள் பிரவேசித்து பார்வையிடவும் அவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ளன. தேர்தலின் நிமித்தம் அரச சொத்துக்கள் முறைகேடாகப் பயன்படுத்தப்படுவதாகக் கிடைத்துள்ள புகார்களுக்கு அமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்கா தெரிவித்திருக்கிறார்.

தேர்தல் சட்ட ஏற்பாடுகளை மீறி அரச சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்தும் அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு எதிராக சட்ட ரீதியில் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இத்தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்பட்டதன் பின்னர் கடந்த ஜுலை 31 முதல் கடந்த ஞாயிற்றுக்கிழமை வரையும் தேர்தல் சட்ட ஏற்பாடுகளை மீறும் வகையிலான 320 செயற்பாடுகள் பதிவாகியுள்ளதாக சுயாதீன தேர்தல் கண்காணிப்பு குழுக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

மேலும் இத்தேர்தலை கண்காணிப்பதற்கான பணிகளில் உள்நாட்டு வெளிநாட்டு சுயாதீன குழுக்களும் ஈடுபட உள்ளன. தேர்தலை நீதியாகவும் சுதந்திரமாகவும் நடத்துவதில் உச்ச பட்ச கவனம் எடுத்துக் கொண்டுள்ள தேர்தல்கள் ஆணைக்குழு அதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளது.

ஆகவே தேர்தல்கள் ஆணைக்குழுவின் முயற்சிகளுக்கு முழுமையான ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். அது நாட்டின் ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாப்பதற்கும் வலுப்படுத்துவதற்கும் அளிக்கப்படும் பாரிய பங்களிப்பாக அமையும். அதற்காக பங்களிப்பது இநநாட்டு பிரஜைகளின் பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# பங்களாதேஷில் கலவரக்காரர்களால் அடித்து நொருக்கப்படும் சிலைகள்!

பங்களாதேஷில் மாணவர்களின் கடும் போராட்டம், கலவரம் மற்றும் அதனால் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக ஷேக் ஹசீனா தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்துவிட்டு, நாட்டை விட்டு வெளியேறினார். அண்டை நாடான இந்தியா, அவருக்கு அடைக்கலம் கொடுத்த அதே வேளையில், பங்களாதேஷில் நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு அமைக்கப்பட்டது.

இருப்பினும், பங்களாதேஷில் சிறுபான்மையினரான இந்துக்கள் மீது தாக்குதல் நடைபெறுவதாகக் காணொளிகள் வெளியாகி வருகின்றன. இந்த நிலையில், 1971 பங்களாதேஷ் விடுதலைக்கான போரில் இந்தியாவிடம் பாகிஸ்தான் சரணடைந்ததை நினைவூட்டும் அடையாளச் சிலைகள், கலவரக்காரர்களால் அடித்து நொருக்கப்பட்டிருக்கின்றன.



முன்னதாக, ஆங்கிலேயர்களிடமிருந்து பாகிஸ்தான் விடுதலை பெற்றதையடுத்து, கிழக்கு பாகிஸ்தானில் அதிகளவிலிருந்த வங்காள மொழி பேசும் இஸ்லாமியர்கள், மேற்கு பாகிஸ்தானிலிருக்கும் இஸ்லாமியர்களால் தாங்கள் வஞ்சிக்கப்படுவதாகவும், ஒடுக்கப்படுவதாகவும் அவர்களுக்கெதிராக எதிர்ப்புக் குரல் எழுப்பினர். அதனால், 1971 இல் தனிநாடு கோரிக்கையை வலியுறுத்தி மேற்கு பாகிஸ்தானுக்கு எதிராக தங்களின் விடுதலைப் போரை அவர்கள் தொடங்கினர்.

அதைத் தொடர்ந்து, அப்போதைய இந்திய பிரதமர் இந்திரா காந்தியின் அரசு கிழக்கு பாகிஸ்தானுக்கு ஆதரவாகக் களமிறங்கியது. மேலும், இந்திய இராணுவம் மேற்கு பாகிஸ்தானை எதிர்த்துப் போரிட்டது. இறுதியில், மேற்கு பாகிஸ்தான் இராணுவ ஜெனரல் அமீர் அப்துல்லா கான் நியாஸி, 93,000 படைவீரர்களுடன் இந்தியாவின் கிழக்குக் கட்டளைத் தளபதியாக இருந்த லெப்டினன்ட் ஜெனரல் ஜக்ஜித் சிங் அரோராவிடம் சரணடைந்தார். இதன் விளைவாக, இந்தியாவின் ஆதரவுடன் வங்கதேசம் என்ற தனிநாடு உதித்தது.

இதனை நினைவுபடுத்தும் வகையில் முஜிப்நகரில் ஷஹீத் நினைவு வளாகம் அமைக்கப்பட்டு, அதில் மேற்கு பாகிஸ்தானின் சரணடைதலை அடையாளப்படும் வகையில், இந்திய இராணுவம் மற்றும் வங்கதேசத்தின் முக்தி பாஹினியிடம், மேற்கு பாகிஸ்தான் இராணுவ ஜெனரல் கையெழுத்திடுவது உட்பட பல சிலைகள் நிறுவப்பட்டன. அவற்றில் சில சிலைகள் தற்போது உடைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த செயலுக்கு இந்தியாவில் கண்டனங்கள் தெரிவிக்கப்படுகின்றன. காங்கிரஸ் எம்.பி சசி தரூர், உடைந்த சிலைகளின் படத்தை தனது X சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டு, "முஜிப்நகரிலுள்ள ஷஹீத் நினைவு வளாகத்தில், இந்தியாவை எதிர்ப்பவர்களால் அழிக்கப்பட்ட சிலைகளின் படங்களைப் பார்க்க வருத்தமாக இருக்கிறது. சிறுபான்மையினரின் வீடுகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களை இஸ்லாமிய பொதுமக்கள் பாதுகாப்பதாகச் செய்திகள் வந்தாலும், பல இடங்களில் இந்திய கலாசார மையம், கோயில்கள், இந்துக்களின் இல்லங்கள் மீதான தாக்குதல்களைத் தொடர்ந்து இந்த சம்பவம் நடந்திருக்கிறது.

சில கலவரக்காரர்களின் நிகழ்ச்சிநிரல் இதில் தெளிவாகத் தெரிகிறது. எனவே, முகமது யூனுசும் அவரது இடைக்கால அரசும், அனைத்து வங்கதேச மக்களின் நலன்களுக்காக சட்டம் ஒழுங்கை மீட்டெடுக்க அவசர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இத்தகைய கொந்தளிப்பான நேரத்தில் வங்கதேச மக்களுடன் இந்தியா நிற்கிறது. ஆனால், இந்த அராஜகத்தை ஒருபோதும் மன்னிக்க முடியாது" என்று ட்வீட் செய்திருக்கிறார்.

# அமுலாக்கத்துறை விசாரணையில் ராகுல் காந்தி!



நேஷனல் ஹெரால்ட் வழக்கில், அமுலாக்கத்துறை விசாரணைக்கு காங்கிரஸ் எம்.பியும், எதிர்க்கட்சி தலைவருமான ராகுல் அழைக்கப்படலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

புதுடில்லியை தலைமையிடமாக வைத்து செயல்படும், 'அசோசியேட்டட் ஜேர்னல் லிமிடெட்' நிறுவனம், நேஷனல் ஹெரால்ட் உள்ளிட்ட பத்திரிகைகளை நடத்தி வந்தது. கடன் நெருக்கடியில் சிக்கிய இந்த நிறுவனத்துக்கு, காங்கிரஸ் கட்சி சார்பில் 90 கோடி ரூபா கடன் கொடுக்கப்பட்டது. இந்தக் கடனில் இருந்து விடுபடுவதற்காக, நேஷனல் ஹெரால்ட் பத்திரிகையை, 'யங் இந்தியன்' என்ற நிறுவனம் விலைக்கு வாங்கியது.

இந்நிறுவனத்தின் இயக்குனர்களாக காங்கிரஸ் தற்காலிக தலைவர் சோனியா, அவருடைய மகனும், எம்.பி.,யுமான ராகுல் உள்ளனர். இந்த பரிமாற்றம், பல ஆயிரம் கோடி ரூபா சொத்துக்களை பறிக்கும் வகையில் நடந்ததாக, பா.ஜ.க மூத்த தலைவர் சுப்ரமணியன் சுவாமி, 2013 இல் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கில், ரூ.751.9 கோடி மதிப்பிலான சொத்துகளை அமுலாக்கத்துறை பறிமுதல் செய்துள்ளது.

இதில் நடந்துள்ள பண மோசடிகள் தொடர்பாக, அமுலாக்கத்துறை வழக்குப் பதிவு செய்துள்ளது. ஏற்கனவே, காங்கிரஸ் மூத்த தலைவர்கள் மல்லிகார்ஜுன கார்கே, பவன் பன்சால் ஆகியோரிடம் அமுலாக்கத் துறை விசாரணை நடத்தியது. கடந்த 2023 ஆம் ஆண்டு ராகுலிடம் 10 மணி நேரத்திற்கு மேலாக விசாரணை நடத்தியது. தற்போது இந்த வழக்கில், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய அமுலாக்கத்துறை அதிகாரிகள் களத்தில் இறங்கியுள்ளனர்.

இந்நிலையில்,நேஷனல் ஹெரால்ட் வழக்கில், அமுலாக்கத்துறை விசாரணைக்கு காங்கிரஸ் எம்.பியும், எதிர்க்கட்சி தலைவருமான ராகுல் அழைக்கப்படலாம். வழக்கு தொடர்புடையவர்கள் அனைவரும் விரைவில் விசாரணைக்கு அழைக்கப்படலாம் என தகவல் வெளியாகியுள்ளது.

# பழங்குடிகள் செறிந்து வாழும் அளிக்கம்பையில் மருத்துவ வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை

அம்பாறை மாவட்டத்தில் பழங்குடிகள் செறிந்து வாழ்கின்ற பிரதேசமான அளிக்கம்பை பகுதியில் ஆரம்ப மருத்துவ பராமரிப்புப் பிரிவொன்றினை ஏற்படுத்தி அதனூடாக அப்பகுதி மக்களுக்கு சுகாதார சேவைகளை வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் முன்னாள் பிராந்திய பணிப்பாளர்கள், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் மற்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி மெலிண்டன் கொஸ்தா ஆகியோரின் பூரண ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்ட குறித்த வேலைத்திட்டமானது கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீன் அவர்களாலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



அளிக்கம்பை பிரதேச மக்களின் சுகாதார நலன்கருதி அங்குள்ள கத்தோலிக்க தேவாலய அருட்தந்தை எஸ். ஜெகநாதன் மற்றும் அப்பகுதி பொது நிறுவனங்களின் முயற்சியின் பலனாக Child Rehabilitation Centre இனால் சுமார் 25 மில்லியன் ரூபா நிதியில் கட்டடமொன்று நிர்மாணிக்கப்பட்டு, அது அண்மையில் சுகாதாரத் திணைக்களத்துக்கு கையளிக்கப்பட்டது.

இந்தக் கட்டடப் பணிகளை முன்னெடுத்த தொண்டு நிறுவனத்தினர், அதற்கு நிதியுதவிகளை வழங்கிய ஜப்பான் நாட்டு பிரதிநிதிகள் அண்மையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரை சந்தித்து அளிக்கம்பை மக்களின் சுகாதார மேம்பாடு தொடர்பாக கலந்துரையாடினர்.

இதன்போது சுகாதாரத் தேவைகளுக்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்துக்கான தளபாடங்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் பௌதிக வளங்கள் தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில் பிராந்திய கண்கானிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம்.மாஹிரும் கலந்து கொண்டார்.

எம்.ஐ.எம்.அஸ்ஹர்
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

# சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் தோறும் சமூக சுகாதார மையம்

சமூக உளநலத்தை மேம்படுத்துவதற்காக, சுகாதார அமைச்சின் உளநல பணியகம் சமூக சுகாதார மையங்களை நிறுவி வருகின்றது. அவை சமூகம், குடும்பம் மற்றும் பயனாளிகளின் பங்கேற்புடன் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் நிறுவப்பட்டு வருகின்றன.

இம்மையங்கள் சமூகத்தில் உள்ள மக்கள் இலகுவாக அணுகக்கூடிய மற்றும் சமூக, கலாசார ரீதியாக பயனாளிகளால் ஏற்றுக்கொள்ளக்கூடிய சேவைகளை ஒருங்கிணைக்கின்றன.

ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கும் ஒரு சமூக சுகாதார மையம் நிறுவப்பட்டு அங்கு உளநல மேம்பாட்டிற்கான அனைத்து நடவடிக்கைகளும் ஒருங்கிணைக்கப்படவுள்ளன. சமூக சுகாதார மையங்கள் தேவைக்கேற்ப பிரதேச செயலகங்கள், அமைச்சுக்கள் மற்றும் ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் சேர்ந்து சேவைகளை ஒருங்கிணைக்கும்.

அந்தவகையில் முதலாவது சமூக சுகாதார மையம் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.ஐ.எம்.கபீர் தலைமையில் இடம்பெற்ற திறப்பு விழா நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு குறித்த சுகாதார மையத்தினை திறந்து வைத்தார்.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா, பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம். மாஹிர், பிராந்திய உளநலப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஜே.நௌபல், பிராந்திய சுகாதார தகவல் முகாமைத்துவ பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஐ.எம்.முஜீப், பிராந்திய மார்பு நோய் சிகிச்சை பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எல்.ஏ.கபூர், பிராந்திய மலேரியா தடுப்பு பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எம்.நௌஷாட், சம்மாந்துறை மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் திருமதி ஜீவா, பிராந்திய வாய் சுகாதாரப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஹபீப் முஹம்மட் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

ஆதம்லெப்பை றியாஸ்
(பாலமுனை விசேட நிருபர்)



# கருணைமழை பொழியும் கானகச் செல்விக்கு மடுத் திருப்பதியில் ஆவணித் திருவிழா

வரலாற்று சிறப்புமிக்க மன்னார் மருத மடுத் திருப்பதியில் மடுமாதாவின் ஆவணித் திருவிழா எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை வெகு விமரிசையாக கொண்டாடப்படவுள்ளது.

மடுத் திருப்பதி புனித மரியாளின் பெயரில்



இலங்கையில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற திருத்தலமாகும். அந்த வகையில் மரியன்னை விண்ணேற்றம் அடைந்த திருநாளில் ஒவ்வொரு வருடமும் இத் திருவிழா கொண்டாடப்பட்டு வருகின்றமை சிறப்பம்சமாகும்.

திருவிழா திருப்பலி எதிர்வரும் 15ஆம் திகதி வியாழனன்று மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் நிறைவேற்றப் படவுள்ளது.

நாட்டின் ஏனைய மறை மாவட்டங்களைச் சேர்ந்த ஆயர்கள், குருக்கள் ஆகியோரின் பங்கேற்புடன் திருவிழாக் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப் படவுள்ளது.

திருவிழா நிகழ்வுகள் திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை எஸ்.ஞானப் பிரகாசம் அடிகளார் தலைமையில் கடந்த 6ம் திகதி மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15ம் திகதி காலை திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

மடுத் திருப்பதி சுமார் 500 ஆண்டுகளுக்கு மேல் பழமையான திருத்தலமாகும். நாட்டின் அனைத்து மக்களின் விசுவாசத்திற்குரிய வழிபாட்டுத் தலமாக இது திகழ்கிறது.வருடா வருடம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து பல்லாயிரக்கணக் கானோர் மடு திருவிழாவில் கலந்து கொண்டு வருகின்றனர்.

திருவிழா திருப்பலியில் சுமார் பல இலட்சம் மக்கள் வரை கலந்து கொள்வர்.

ஒல்லாந்தர் இலங்கையை ஆண்ட காலப் பகுதியோடு தான் மடுத்திருப்பதி யின் வரலாறும் ஆரம்பமாகின்றது.மன்னாரில் இருந்து 10 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் இருக்கும் மாந்தை என்ற கிராமத்தின் ஆலயம் தான் மடுமாதா திருச்சுருபத்தின் ஆரம்ப இருப்பிடமாகும். 'செபமாலை மாதா' என்று அழைக்கப்பட்ட அந்தத் திருச்சுருபம் தான் இன்றைய மடுமாதா.

ஒல்லாந்தருடைய ஆட்சியில் கத்தோலிக்கருக்கு எதிராக கொடூரமான வேத கலாபனை ஆரம்பித்தது. இந்தக் கலாபனையில் இருந்து தங்களைக் காப்பாற்றும் பொருட்டும் செபமாலை மாதாவின் திருச் சுருபத்தைப் பாதுகாக்கும் பொருட்டும் மாந்தை மக்கள் அங்கிருந்து புறப்பட்டனர்.

குருக்களின் துணையில்லாத அந்த வேளையிலும் மாந்தையில் இருந்த 20 பக்தியுள்ள குடும்பங்கள் செபமாலை மாதாவின் திருச்சுருபத்தைத் தூக்கிக் கொண்டு அடர்ந்த வன்னிக் காட்டில் பிரவேசித்தனர்.

திசை தெரியாது அங்கும் இங்கும் அலைந்தனர். இறுதியாக 'மருதமடு' என்ற இடத்திற்கு எவ்வித ஆபத்தும் இன்றி மாதாவின் வழி நடத்தலோடு வந்து சேர்ந்தார்கள்.

மடுத் திருப்பதியின்அற்புத ஆற்றல் உலகறிந்த விடயமாகும். மடு அன்னையின் பரிந்துரையால் பல அற்புதங்கள் நடைபெறுகின்றன. அதனால் தான் இப் பதி நோக்கி மக்கள் இலட்சக் கணக்காக கூடுகின்றனர்.

பொன் விளையும் பூமி என்பது போல் மடு அன்னையின் திருப்பதியில் உள்ள மண் கூட மருந்தாகத் திகழ்கின்றது. அந்த மண் அருள் நிறைந்த மண். ஆற்றல் நிறைந்த மண். இத் திருத்தல மண்ணுக்கு



படங்கள்: மன்னார் குறுப் நிருபர்



சிறப்பான பெருமை உண்டு.

உலகின் எங்குமே இல்லாத நிலையில் திருத்தலத்திலிருந்து பெறப்படும் மண் நோய் தீர்க்கும் அருமருந்தாக விளங்குகிறது.

இத்திருப்பதியின் வளாகத்திலிருந்து பெறப்படும் மண் ஆசீர்வதிக்கப்பட்டு பிரதான ஆலயத்தின் ஒரு மூலையில் அதற்கென அமைக்கப்பட்ட ஒரு தொட்டியில் வைக்கப்படுகின்றது. இந்த மண்ணை மக்கள் தம் வீடுகளுக்கு எடுத்துச் செல்கிறார்கள்.

குணமளிக்கும் மருந்தாக இந்த மண்ணைப் பயன்படுத்துகின்றார்கள். 'கோயில் மருந்து' என்று இது அழைக்கப்படுகிறது.

பாம்பு தீண்டிய நிலையில் இங்கு கொண்டுவரப்படும் மக்கள் இப்பதியை அடைந்ததும் குணம் பெறுகின்றார்கள் என்பதும் மக்களின் ஆழமான விசுவாசமாகும்.

'கருணைமழை பொழியும் கானகச் செல்வி' என மடு அன்னை அழைக்கப்படுகின்றார். குறைவுபடாத தாயன்புக்கு இலக்கணமாகவும் இவள் விளங்குகின்றார். துன்பங்கள், துயரங்கள், இழப்புக்கள் மத்தியில் மக்கள் ஆறுதல் தேடித் தஞ்சமடையும் தாயாக மடு அன்னை விளங்குகிறாள்.

எக் குலத்தவராயினும், எம்மொழியினராயினும் இஎவ்வினத்தவராயினும் அனைவரும் இறைவனின் பிள்ளைகளே என்ற உணர்வுடன் இத்திருப்பதி அனைத்து மக்களையும் வரவேற்கின்றது.

இத் திருப்பதியின் நுழைவாயிலில் அமைந்துள்ள மடு அன்னையின் திருச்சுருபம் 'வரவேற்பு மாதா' என்று அழைக்கப்படுகிறது.

மடு அன்னை இரு கரங்களையும் விரித்தவராய் தன் திருப்பதி நோக்கி வரும் அனைவரையும் தன் கைகளை நீட்டி அழைக்கும் தோற்றத்தோடு விளங்குவது கண்ணுக்கினிய காட்சியாகும். மக்கள் மத்தியில் மன்னிப்பு, ஒப்புரவு, சமாதானம் போன்ற உயர்ந்த விழுமியங்களை ஏற்படுத்துவதற்கு அவர்கள் ஒன்று சேரக்கூடிய ஒரே இடம் இந்த நாட்டில் மடுத்திருப்பதி தான்.

கன்னி மரியாள் களங்கமற்ற நீர்ச்சுனை. இறை மகனையே தன் உதரத்தில் சுமந்த திருப்பேழை. கடவுளையே தாங்கி நின்ற புதிர்ப் பாத்திரம். ஆன்மாவோடும் உடலோடும் விண்ணேற்றம் அடைந்த அன்னை மரியாவுக்கு மடுப்பதியில் பெருவிழா. அலகையை வென்று அகிலத்தைக் காத்த அந்த அன்னைக்கு இறைவன் அளித்த அன்புப் பரிசு அவரை விண்ணகத்திற்கு அழைத்துக்கொண்டது.

தாய் விண்ணேறிச் சென்றால் சேய்கள் நமக்கெல்லாம் அது பெருவிழா தானே! அதனால்தான் மடுத்திருப்பதி விழாக்கோலம் பூண்டு மக்கள் வெள்ளத்தில் நிரம்பி வழிகின்றது.

'மருதமடு மாதாவே மனுக்குலத்தின் தாயாரே' என்ற கான வரிகள் காற்றில் என்றும் கலக்கட்டும். அதன் வழி மருதமடு தாயின் புகழ் என்றும் நிலைக்கட்டும்.

**எஸ்.றொசேரியன் லெம்பேட்**




# அன்னை மரியாள் அகில உலகிற்கும் ஒளியின் பாதையைத் திறந்துவிட அருள் வேண்டுவோம்

முதுபெரும்தந்தை கர்தினால் பியர்பத்திஸ்தா



இருள் நிறைந்த நீண்ட இரவாகிய நாம் வாழ்கின்ற இக்காலத்தில், அன்னை மரியாள் நம் ஒவ்வொருவருக்கும் அகில உலகிற்கும் ஒளியின் பாதையைத் திறந்துவிட அருள்வேண்டுவோம் என முதுபெரும் தந்தை கர்தினால் பியர்பத்திஸ்தா தெரிவித்துள்ளார்.

நாம் ஒப்புரவு மற்றும் அமைதியின் வார்த்தைகளை நமது செபங்களாக அன்னை மரியிடம் கொண்டுசெல்வோம் என்றும் தெரிவித்துள்ள அவர், மோதலுக்கான முடிவைக் கற்பனை செய்வது என்பது கடினமாகி வருகின்றது என்றும், அதனுடைய தாக்கம் முன்பை விட இப்போது மிக அதிகமாக இருப்பது வேதனையளிக்கின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

அமைதியான எதிர்காலம், அன்பான உறவுகள், உரையாடல்கள், அதற்கேற்ற மனிதர்கள் போன்றவற்றைக் காண்பது மிகவும் கடினமாகி வருகின்றது. பயங்கரமான போர்கள் தொடங்கி பல மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும், மோதலால் ஏற்படும் துன்பங்களும் என்ன நடக்கிறது என்ற திகைப்பும் குறையாமல் இருக்கின்றது என்றும், வெறுப்பு மற்றும் அவமதிப்பு ஆகியவற்றால் மீண்டும் மீண்டும் தூண்டப்பட்டு வன்முறையைத் தீவிரமாக்கி தீர்வு காண்பதற்கான வாய்ப்பை உதறித் தள்ளுகிறது இப்போர்ச்சூழல் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆகஸ்ட் 15 திருஅவையில் சிறப்பிக்கப்படவுள்ள அன்னை மரியின் விண்ணேற்புப் பெருவிழாவை முன்னிட்டு உலகில் அமைதி நிலவ வலியுறுத்தி எருசலேமின் இலத்தின் வழிபாட்டுமுறை மக்களுக்கு செய்தி ஒன்றினை வெளியிட்டுள்ளார்.

இத்தகைய கடினமான வன்முறையான சூழல், கோபம் போன்றவற்றால் நாம் நசுக்கப்பட்டவர்களாகத் தோன்றினாலும் ஆகஸ்ட் 15 கன்னி மரியாள் விண்ணகத்திற்கு எழுந்தருளிச்சென்ற நாளின் போது அன்னை மரியாள் உலக அமைதிக்காக இறைவனிடம் பரிந்து பேச செபிக்கும்படி அனைவருக்கும் அழைப்புவிடுத்துள்ளார் முதுபெரும் தந்தை கர்தினால் பியர்பத்திஸ்தா.

**மெரினா ராஜ்**

# புனித அன்னை மரியாளின் விண்ணேற்புப் பெருவிழா

வானதூதரால் வாழ்த்துப் பெற்ற அன்னை மரியாள் அதே வானதூதர்கள்புடைசூழ விண்ணகம் எடுத்துக்கொள்ளப்பட்டார். விண்ணகத் தந்தையின் திருவுளத்தைதன் பிறப்பு முதல் நிறைவேற்றியதன் பலனாக தான் உடலோடும்ஆன்மாவோடும்விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு விண்ணக அரசியாக முடிசூட்டப்படும்பாக்கியம் பெற்றார்.

அழகின் முழுமையவள், அலகையின் தலை மிதித்தவள், ஏவாளின்பாவத்தை ஒழித்தவள், ஏவாளின் சாபத்தை அழித்தவள் . ஆதாம் ,ஏவாள் சிக்கிக் கொண்ட அலகையின் சூழ்ச்சியினின்று உலகினை மீட்க, தானே புதிய ஏவாளாகபிறப்பெடுத்துபுதிய ஆதாமாகிய இயேசுவைப் பெற்றெடுக்க இறைவனின் அடிமையாகஅடிபணிந்தவள். நாமும் அலகையின் பிடியிலிருந்து மீண்டெழ துணை செய்பவள்.

கன்னி மரியாள் விண்ணேற்பு அடைந்தார் என்ற அறிக்கை வந்து 71 ஆண்டுகளே ஆகின்றன. ஆனால், மரியாவின் விண்ணேற்புத் திருவிழாவை, கிறிஸ்தவர்கள், 8 அல்லது 9ம் நூற்றாண்டிலிருந்தே கொண்டாடிவருகின்றனர்.

மரியாளை அன்னையாக, கன்னியாக சிறப்பிக்க, ஆண்டுதோறும் பல விழாக்களைக் கொண்டாடுகிறோம். அவற்றில், 19 திருவிழாக்கள், கத்தோலிக்க உலகம் அனைத்திற்கும் பொதுவான திருவிழாக்கள்.

இவையன்றி, திருத்தலங்களில் கொண்டாடப்படும் திருவிழாக்களும் உண்டு. வேளாங்கண்ணி, பாத்திமா, லூர்து, குவாதலூப்பே, என்று, உலகின் பல நாடுகளில் உருவாக்கப்பட்டுள்ள அன்னையின் திருத்தலங்களில், ஆண்டு முழுவதும் அன்னையின் பக்திக்குச் சான்று பகரும் பல நிகழ்வுகள் நடந்தவண்ணம் உள்ளன.

இவை அனைத்தையும் ஒன்றுதிரட்டிப் பார்க்கும்போது, கத்தோலிக்கர்கள் நடுவில் மட்டுமல்லாமல், பிறமதத்தவரின் வாழ்விலும், அன்னை மரியாள் மிக உயர்ந்ததோர் இடத்தைப் பெற்றிருக்கிறார் என்பது நிச்சயம். மரியன்னைக்கென நாம் கொண்டாடும் அனைத்து திருநாள்களின் மகுடமாக அமைவது, ஆகஸ்ட் 15ம் திகதி, நாம் கொண்டாடும் விண்ணேற்புப் பெருவிழா.

ஒவ்வொரு முறையும் மரியன்னையின் திருவிழாவைக் கொண்டாடும்போது, நம் உள்ளங்களில் சில கேள்விகள் எழும். இன்றும் எழுகின்றன. மரியன்னைக்கு நாம் இன்று காட்டும் இந்த அளவு மரியாதை, புகழ், வணக்கம் எல்லாம், நாசரேத்து கிராமத்தைச் சேர்ந்த இளம்பெண் மரியாளுக்கு, அவர் வாழ்ந்த காலத்தில் கிடைத்தனவா?

மரியாள் வாழ்ந்த காலத்தில் அவர் அடைந்த கொடுமைகளை மறந்துவிட்டு அல்லது மறைத்துவிட்டு மரியன்னையை பீடங்களிலும், கோபுரங்களிலும் ஏற்றிவைக்கும் நம் பக்தியை அவர் விரும்புவாரா?

அல்லது, இந்தளவு அவர் உயர்ந்ததற்குக் காரணமாய் இருந்த அவர் வாழ்வுப் பாடங்களை நாம் மீண்டும் கற்றுக்கொள்வது அவருக்கு அதிகம் பிடிக்குமா? இவை நம் உள்ளங்களில் எழும் சில சங்கடமானக் கேள்விகள்.அன்னை மரியாவை மையப்படுத்தி நாம் கொண்டாடும் ஒவ்வொரு விழாவன்றும், அவரது வாழ்வை, கொஞ்சமாகிலும் புரட்டிப்பார்க்க, அவரது வாழ்வு சொல்லித்தரும் பாடங்களை, சிறிதாகிலும் கற்றுக்கொள்ள, நமக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கப்படுகிறது.

இருபது நூற்றாண்டுகளுக்குமுன், வரலாற்றில் வாழ்ந்த மரியாளை இன்று சந்திக்க முயல்வோம். கலிலேயாவின் சின்னக் கிராமம் நாசரேத்தை கற்பனை செய்துகொள்வோம்.

அக்கிராமத்தில் வாழ்ந்த இளம்பெண் மரியாள், மிக எளிய கிராமத்துப் பெண். இன்று, இவ்வளவு தூரம் பேரும் புகழும் தான் அடைவோம் என்பதை, அவர் கனவிலும் எண்ணியிருக்கமாட்டார்.



மரியாள் கண்டுவந்த கனவெல்லாம் ஒன்றுதான். தினம் தினம் செத்துப்பிழைக்கும் தானும், தன் மக்களும், உரோமையக் கொடுமைகளிலிருந்து விடுதலை பெறவேண்டும் என்பதே, அந்தப் பெண்ணின் கனவாக, வேண்டுதலாக இருந்திருக்கவேண்டும்.

**அருட் சகோதரி பிரின்ஸி**

# செக்கட்டித்தெரு புனித அன்னம்மாள் திருவிழா











கொழும்பு செக்கட்டித்தெரு புனித அன்னம்மாள் ஆலயத்தின் வருடாந்த திருவிழா அண்மையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. கொடியேற்றத்துடன் ஆரம்பமான திருவிழா நிகழ்வுகளில் தினமும் நவ நாள் ஆராதனைகள் இடம்பெற்று, திருவிழா தினத்தன்று காலை கூட்டுத் திருப்பலி அருட்தந்தை ஜோய் மரியரட்ணம் அடிகளாரின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. அருட்தந்தை உதயதாஸ் மற்றும் பங்குத் தந்தை ஒனாசியஸ் பெர்னாண்டோ ஆகியோர் இணைந்து கூட்டுத்திருப்பலியை நிறைவேற்றினர்.

படங்கள்: மத்தியூ ஜேசுதாசன்

# ஆழ் கடலுக்குச் சென்று உயிரிழந்த மீனவர்களின் குடும்பத்தினரைச் சந்தித்த அமைச்சர் டக்ளஸ்





ஆழ் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றபோது கடலில் மிதந்து வந்த போத்தலில் இருந்த பாணத்தை குடித்து உயிரிழந்த கடற்றொழிலாளர்களின் குடும்பத்தினரை, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று (12) சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இதன்போது, உயிரிழந்தவர்களுக்கான நஷ்டஈடு தொடர்பாக, அமைச்சர் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு நன்றி தெரிவித்த குடும்பத்தினர், விரைவாக குறித்த நஷ்டஈடுகள் கிடைக்க உதவுமாறு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இச் சந்திப்பின்போது, அமைச்சின் செயலாளர் மற்றும் கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 12 ஆயிரம் மெற்றிக்தொன் நெல் உற்பத்தி பாதிப்பு நீரும் வீண் விரயமாகுவதாக விவசாயிகள் கவலை

பரந்தன் குறாப் நிருபர்

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழான 2024 சிறுபோக செய்கையில், சுமார் ஆறாயிரம் ஏக்கர் நிலப்பரப்பு, செய்கைக்கு அனுமதிக்கப்படாத நிலையில், 12 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன் விவசாயத்துக்கு பயன்படுத்தப்பட்ட நீரை விட, அதிகளவான நீர் வீண் விரயமாக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் குற்றச்சாட்டியுள்ளனர்.

கிளிநொச்சி இரவணைமடுக்குளத்தில் இருந்து சிறுபோகத்திற்கான நீர் திறந்து விடப்பட்டுள்ள நிலையில், அளவுக்கு அதிகமான நீர், கால்வாய்கள் ஊடாகவும் தரிசு நிலங்களினூடாகவும் திறந்து விடப்பட்டுள்ளது.

இதனால், சிறுபோக அறுவடையும் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். கிளிநொச்சியில், இரணைமடுக் குளத்தின் கீழுள்ள 21 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பிலும் பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியும் என விவசாயிகள் தெரிவித்துள்ளபோதிலும், அதனை மறுத்துள்ள சில கமக்கார அமைப்புகளும் நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகளும், 15 ஆயிரத்து 750 ஏக்கர் நிலத்தில் மட்டும் பயிர் செய்கை மேற்கொள்வதற்கான அனுமதியை வழங்கியுள்ளனர்.

இந்நிலையில், குளத்தின் கிழான எஞ்சிய ஆறாயிரம் ஏக்கர் நிலம் தரிசாக விடப்பட்டதுடன், ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் தமது வாழ்வாதாரத்தை இழந்துள்ளதுடன் தனிப்பட்ட ஒருசிலர் மாத்திரமே இலாபமடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், கிளிநொச்சி மாவட்டத்தின் உற்பத்தியில் 12 ஆயிரம் மெற்றிக் தொண் நெல்லுற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

## மூதாட்டி மர்ம மரணம்

யாழ் . விஷேட நிருபர்

தனிமையில் இருந்த மூதாட்டி ஒருவர், சந்தேகத்திற்கிடமான முறையில், உயிரிழந்துள்ள சம்பவமொன்று யாழ்ப்பாணத்தில் பதிவாகியுள்ளது. மீசாலை வடக்கைச் சேர்ந்த நடேசப்பிள்ளை சரஸ்வதியம்பாள் என்ற 80 வயதுடைய வயோதிபப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த வயோதிபப் பெண், சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்த நிலையில் நேற்று முன்தினம் (11)சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இதனையடுத்து, விசாரணைகளை மேற்கொண்ட கொடிகாம பொலிஸார், மூதாட்டியின் வீட்டுக்கு அருகில் வசித்து வந்த இளைஞனை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்துள்ளனர்.

## இன்றைய பலன்கள்

(13.08.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
உத்தியோகத்தில் சிலருக்கு இடமாற்றம் ஏற்படலாம். அலுவலகத்தில் பணிச்சுமை கூடும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு மகிழ்ச்சி அளிக்கும்.

**ரிஷபம் :**
எதிர்பார்த்த பணம் வரவு கைக்கு கிடைக்கும். இனிப்பான செய்தி கிடைத்து இல்லத்தில் அனைவரும் மகிழ்ச்சி அடைவார்.

**மிதுனம்:**
மகிழ்ச்சி கொள்ளும்படி பணம் கைக்கு வந்து சேரும். நண்பர்கள் உறவினர்களும் தகுந்த நேரத்தில் உதவி செய்வார்கள்.

**கடகம்:**
நண்பர்களின் உதவி மகிழ்ச்சி அளிக்கும். உறவினர்கள் மத்தியில் உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகளை அடைவீர்கள்.

**சிம்மம்:**
வரவேண்டிய பணம் தாமதம் இன்றி வந்து சேரும். எதிர்பார்த்த காரியங்கள் இனிதே நடப்பதால் மனதில் இனபுரியாத மகிழ்ச்சி குடியேறும்.

**கன்னி:**
சமூகத்தில் மதிப்பு மரியாதை அதிகரிக்கும். பேச்சை குறைத்து செயல்களில் அதிக ஈடுபாட்டுடன் இருந்து முக்கிய காரியங்களை சாதிப்பீர்கள்.

**துலாம்:**
பணம் கைக்கு வருவதில் சிறுசிறு தாமதங்கள் ஏற்படலாம். பெண்களின் மரியாதைக்கு பங்கம் வராமல் நடந்து கொள்வதன் மூலம் நன்மைகளை அடைவீர்கள்.

**விருச்சிகம்:**
பணப்பரிவர்த்தனையில் நிதானப் போக்கும் அவசியம். வரவேண்டிய பணம் தாமதமாக வந்து சேரலாம்.

**தனுசு:**
உத்தியோகத்தில் உள்ளவர்கள் தங்கள் பணிகளில் அதிக கவனத்துடன் இல்லாவிட்டால் உயர் அதிகாரிகளின் கோப பார்வைக்கு இலக்காக நேரிடும்.

**மகரம்:**
வாக்குறுதி கொடுப்பதை தவிர்ப்பது நன்மை தரும். எதிர்பார்த்தவைகள் சற்று தள்ளி போகலாம். வட திசையில் இருந்து வரும் தகவல் மனதுக்கு நிம்மதியை தரலாம்.

**கும்பம்:**
மனதில் சலனமும் செய்யும் காரியங்களில் தடுமாற்றமும் ஏற்படலாம். அவசியமான காரியங்களை கவனமுடன் செய்வது பிரச்சனைகளை தவிர்க்கும்.

**மீனம்:**
எதிர்பார்க்கும் உறவினர்கள் நண்பர்கள் கேட்ட உதவி செய்ய முடியாமல் அவர்களின் அதிர்ச்சிக்கு ஆளாகலாம்.

## ஜனாதிபதி தேர்தல்: வேட்பாளர்...

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சில உறுப்பினர்கள் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்குமாறு இங்கு கருத்துத் தெரிவித்துள்ளனர். இதன் போது கருத்து தெரிவித்த சந்திரிகா: எந்த வேட்பாளருக்கும் ஆதரவளிக்கப் போவதில்லை.

அத்தனகல்ல பிரதேசத்தில் செயற்படும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினர், எந்த வேட்பாளரை ஆதரித்தாலும் தமக்கு ஆட்சேபனை இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

## வேட்புமனு தாக்கல் தினத்தில்...

இப்பிரதேசத் தில் போக்குவரத்துச் செய்வது மற்றும் நடமாடுவது என்பவற்றை தவிர்க்குமாறு கோரப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க இந்த கோரிக்கையை விடுத்துள்ளதுடன், இதுவரைக்கும் 337 தேர்தல் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.கடந்த 24 மணித்தியாலங்களில் மாத்திரம் 17 தேர்தல் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## 18 வயதைக் கடந்துள்ள...

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கடந்த மே 31 வரை 1132598 புதிய வரிக்கோவைகள் காணப்படுவதாகவும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க சுய விருப்பின் பேரில் 1.5 இலட்சம் பேரே, தமக்கான வரி குறியீட்டு இலக்கத்தை பெற்றுக் கொண்டுள்ளதாகவும் ஏனையவர்கள் அதனைப் பெற்றுக் கொள்ளும் வகையில் அவர்களுக்கு அறிவுறுத்துவது முக்கியமாகும் என்றும் தெரிவுக்குழு குறிப்பிட்டுள்ளது.

அதேபோன்று டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் தொகுதியை உருவாக்கி, சகலரதும் அடையாளத்தை இனங்கண்டு மேற்படி இலக்கத்தை பெற்றுக் கொடுப்பதன் முக்கியத்துவம் தொடர்பிலும் தெரிவுக் குழு ஆலோசனை வழங்கியுள்ளது.

## காங்கேசன்துறை-நாகபட்டினம்...

பயணச் சீட்டுக்களை வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் கூறினார்.

பயணிகள் படகு சேவைகள் ஏற்கனவே மே, மாதம் 13 முதல் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டது, ஆனால் படகு வழங்குவதில் தாமதம் மற்றும் தவிர்க்க முடியாத காரணங்களால் இச்சேவையை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டது .

## ஜனாதிபதியின் முதலாவது...

வழங்கும் அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகள் மேற்படி முதலாவது மக்கள் பேரணிக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளன.

அநுராதபுரம் மாவட்டத்தின் ஸ்ரீலங்கா சுதந்திர மக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட மேலும் கட்சிகள் மற்றும் அமைப்புகள் இந்த மாபெரும் மக்கள் பேரணிக் கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளன.

இந்த கூட்டத்தில் மேற்படி கட்சிகள் அமைப்புகளின் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்வார்கள் என முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ். எம். சந்திரசேன தெரிவித்துள்ளார்.

## அரச நிறுவனங்களிடமிருந்து...

வருமானஅதிகரிப்பு முன்னேற்றம் தொடர்பான பேச்சு வார்த்தையிலே இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வருடத்தின் ஆரம்பத்திலிருந்து 2024 ஜூன் 30 வரை எதிர்பார்த்த வரி இலக்கு 826 பில்லியன் ரூபா என்றும், இக்காலப் பகுதியில் 92 பில்லியனை வரி அறவீடாகப் பெற்றுக் கொள்ள முடிந்துள்ளதாகவும் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அதே வேளை,மேன்முறையீட்டு நடைமுறை காரணமாக வரி அறவிடுவதில் ஏற்படும் தாமதத்தை தவிர்ப்பதற்கு தேசிய வருமான வரி சட்டத்தை விரைவில் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்காலிகமாக வற் இலக்கத்தை பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளால், இடம்பெற்றுள்ள மோசடிகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், இவ்வருடத்தின் நடுப்பகுதியாகும் போது தற்காலிக வற் இலக்கம் வழங்குவதை நிறுத்துவதற்கு யோசனையை முன் வைக்குமாறும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தோட்ட தொழிலாளர்களது...

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நேற்றைய தீர்மானமானது மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வில் பல்வேறு தேவைகள் நிறைவேற்றப்பட்ட தினமாகும்.

அந்த வகையில் சம்பள விவகாரம் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டு நீதிமன்றத்தினால் குறிப்பிடப்பட்ட தவறுகள் திருத்தப்பட்டு, 1700 ரூபா சம்பள உயர்வைப் பெற்றுத் தருவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆகியோருக்கு நன்றி தெரிவிப்பதாக அமைச்சர் ஜீவன் தொண்டமான், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் ஆகியோர் நன்றி தெரிவித்தனர்.

## ஜனாதிபதியின் நடவடிக்கைக்கு...

ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல்சுரேஷ் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் நேற்று சம்பள நிர்ணய சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதையடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பள முன்மொழிவை முன்வைத்தது போல, அதனை மக்கள் கைக்கு பெற்றுக் கொடுக்கும் முழு பொறுப்பையும் ஏற்கும் என்றும், இந்த சம்பள அதிகரிப்பு கிடைக்க ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மேற்படி சம்பள அதிகரிப்பு தொடர்பான தீர்மானத்தையடுத்து பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தமது மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளதுடன் ஜனாதிபதிக்கும் தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

இந்த நாள் ஒரு மகிழ்ச்சியான நாள். எமது மக்களின் சம்பள உயர்வு சம்பந்தமான விவகாரம் கடந்த மூன்று வருட காலமாக இழுத்தடிக்கப்பட்டது. எனினும், இது தொடர்பான தீர்மானம் சட்டபூர்வமாக நிறைவேற்றப்பட்டுள்ளமை மகிழ்ச்சி தருகிறது.

பாரிய வாதப்பிரதிவாதங்கள், வாக்கெடுப்புக்கள் அனைத்திற்கும் முகங்கொடுத்து தற்போது எமது மக்கள் எதிர்பார்த்த 1,350 அடிப்படை சம்பளம், உற்பத்தி ஊக்குவிப்பு கொடுப்பனவு 350 ரூபா என தீர்மானிக்கப்பட்டு மொத்தமாக 1,700 ரூபா வழங்கப்படவுள்ளது. அதே வேளை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு எவ்வாறு முகங்கொடுப்பது என்பது தொடர்பாக தீர்மானித்திருந்தோம். அதற்கமைய ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கே ஆதரவு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## ஓய்வூதியர்களுக்கான 3000 ரூபா...

அனைத்து ஓய்வூதியக்காரர்களுக்கும் தற்போது வழங்கப்படும் 2,500 ரூபா கொடுப்பனவுடன் 3,000 ரூபாவையும் சேர்த்து எதிர்வரும் அக்டோபர் மாதத்திலிருந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் செப்டெம்பர் மாத நிலுவைத் தொகையான 3,000 ரூபாவுடன் அக்டோபர் மாதம் ஓய்வூதியம் 6,000 ரூபாவாக வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து நவம்பர் மாதம் முதல் இதுவரை வழங்கப்பட்ட .2,500 ரூபாவுடன், புதிதாக வழங்கப்படும் இடைக்கால உதவித் தொகையான 3,000 ரூபாவும் ஓய்வூதியக்காரர்களுக்கு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த மேலதிக கொடுப்பனவான 3,000 ரூபாவை வழங்குவதற்கு நிதி அமைச்சும் முழுமையான எழுத்துமூல அனுமதியை வழங்கியுள்ளதால், பொது நிர்வாக அமைச்சும் இதற்கான சுற்றறிக்கையை வெளியிட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், செப்டெம்பர் மாதம் அந்த கொடுப்பனவை வழங்குவதற்கு தேர்தல் ஆணைக்குழு எதிர்ப்பு தெரிவித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி, அக்டோபர் மாதம் இடைக்கால கொடுப்பனவாக 3,000 ரூபாவும், செப்டெம்பர் மாத நிலுவைத் தொகையான 3,000 ரூபாவுடன் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஒக்டோபர் மாத ஓய்வூதியத்துடன் 6,000 ரூபா கிடைக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சஜித்,பிரபாகணேசன்... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

மனிதநேய மக்கள் கூட்டணியில் பதிவு செய்யப்பட்ட மூன்று கட்சிகள் உள்ளன.

மேலும் பதிவு செய்யப்படாத கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் உட்பட மொத்தம் 28 அமைப்புக்கள் இக்கூட்டணியில் உள்ளன. கொழும்பு சினமன் லேக்சைட் ஹோட்டலில் இன்று செவ்வாய்க்கிழமை இந்நிகழ்வு மாலை நான்கு மணியளவில் இடம்பெறும்.

## ஹரீன், மனுஷ... (3ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகம் இதற்கான அறிவிப்பை எழுத்து மூலம் விடுத்துள்ளதாக பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 64 (1) மற்றும் 64 (5) பிரிவின்படி இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார மற்றும் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ ஆகிய இருவரையும் கட்சி உறுப்புரிமையிலிருந்து நீக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி மேற்கொண்ட தீர்மானம், சட்டபூர்வமானது என உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.ஆகஸ்ட் (09) நீதிமன்றத்தினால் மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டது. இதையடுத்து இரு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

முன்னாள் அமைச்சர்களான மனுஷ நாணயக்கார மற்றும் ஹரின் பெர்னாண்டோ ஆகியோர் தமது கட்சி உறுப்புரிமையை இரத்து செய்வதற்கு, ஐக்கிய மக்கள் சக்தி எடுத்த தீர்மானம் சட்டத்திற்கு முரணானது எனக் கோரி, தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம் மேற்படி தீர்ப்பை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஐக்கிய மக்கள் சக்தியின்...

பொன்சேகா இப்பதவியிலிருந்து விலகியதால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கே,இம்தியாஸ் எம்.பி.நியமிக்கப்பட உள்ளார்.ஐக்கிய மக்கள் சக்தி மாநாட்டில் அதிகாரபூர்வமாக இதற்கான பிரேரணை முன்வைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரியநேத்திரன் சார்பாக...

சந்திப்பில், இது தொடர்பிலான அறிவிப்பு ஸ்ரீகாந்தாவால் வெளியிடப்பட்டது. சிவில் சமூக கட்டமைப்பினருடன் இணைந்து தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவாக தமிழ் மக்கள் கூட்டணி, ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எப், தமிழ் தேசிய பசுமை இயக்கம்,தமிழ் தேசிய கட்சி, ஜனநாயக போராளிகள் கட்சி என்பன ஆதரவளிக்கவுள்ளன .

## கொழும்பு-கண்டி வீதியில்...

வேவல்தெனிய சந்தியில் இவ் விபத்து இடம்பெற்றதாகவும் விபத்தில் மேலும் மூவர் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீதியில் பயணித்த முச்சக்கர வண்டியொன்று வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கொள்கலனில் பின்னால் மோதியதில், இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் காயமடைந்த மூவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## ஆதரிக்கும் வேட்பாளரை...

வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டதால், கூட்டத்தில் குழப்பநிலை ஏற்பட்டு, எவ்வித முடிவுமின்றி கூட்டம் முடிவுற்றது.

இதையடுத்து,ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களுடன் தமிழரசுக்கட்சி கலந்துரையாடவுள்ளதாக கட்சியின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.வடக்கு,கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவளிக்கும் வேட்பாளரையே தமிழரசுக்கட்சி ஆதரிக்குமென, பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் குறிப்பிட்டார்.

இந்த நிலைப்பாட்டை தேர்தல் விஞ்ஞாபனத்திலும் சிங்கள மக்களுக்கு வெளிப்படுத்த தயாராகும் வேட்பாளருக்கே ஆதரவு வழங்கப்படும் என்றும் சுமந்திரன் எம்.பி. தெரிவித்தார்.

# கொழும்பு மயூரபதி ஸ்ரீபத்திரகாளி அம்மன் கோயிலின் 37ஆவது ஆண்டு ஆடிப்பூர மஹோற்சவ பெருவிழா














## ஒரு வருடமாக மாணவி பாலியல் துஷ்பிரயோகம்; 18 மாணவர்கள் கைது!

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

தரம் 11 இல் கல்வி கற்கும் பாடசாலை மாணவி ஒருவர், சுமார் ஒரு வருட காலமாக பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளான சம்பவமொன்று தனமல்வில பிரதேசத்திலுள்ள பிரதான பாடசாலையொன்றில் பதிவாகியுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில், சந்தேகத்தின்பேரில் பாடசாலை மாணவர்கள் 18 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட சிறுமியை, மருத்துவ பரிசோதனைக்காக ஹம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் அனுமதித்தபோது, அங்கிருந்த வைத்தியர் ஒருவர் சிறுமியை அச்சுறுத்தியதனால், சிறுமி தற்கொலைக்கு முயன்றதாக சிறுமியின் தாய் குற்றஞ்சாட்டியுள்ளார். சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

தனமல்வில பாடசாலையொன்றில் 11 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவி, அதே பாடசாலையைச் சேர்ந்த மாணவன் ஒருவனை காதலித்து வந்துள்ளார்.

இந்நிலையில், தனது காதலியான மாணவியை நண்பனின் வீட்டுக்கு அழைத்துச்சென்ற காதலன், குறித்த மாணவியை முதல் முறையாக பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார்.

அத்துடன், வீட்டிலிருந்த மாணவனின் நண்பர்கள், மாணவிக்கு மதுவை குடிக்க வற்புறுத்தியுள்ளதுடன், அவர்களும் மாணவியை துஷ்பிரயோகத்துக்குள்ளாக்கியுள்ளதுடன், அதனை வீடியோவாகவும் பதிவு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், குறித்த வீடியோவை காட்டி 2023 ஆம் ஆண்டு முதல் 7 தடவைகள் மாணவியை கூட்டுப் பலாத்காரம் செய்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## குளவி கொட்டுக்கு இலக்காகி 04 பெண்கள் வைத்தியசாலையில்

### தீர்வு வழங்குமாறு கோரிக்கை

**(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)**

தலவாக்கலை, வட்டக்கொடை, கீழ் பிரிவு தோட்டத்தில், தேயிலை கொழுந்து பறித்துக் கொண்டிருந்த தொழிலாளர்கள் நான்கு பேர் குளவி கொட்டுத் தாக்குதலுக்கு இலக்காகி லிந்துலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தேயிலை மலையில், மரம் ஒன்றில் கட்டப்பட்டிருந்த குளவிக்கூடு நேற்று (12) களைந்ததுள்ள நிலையில் இச் சம்பவம் இடம்பெற்றதுள்ளது.

இதில் நான்கு பெண் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், குளவி கொட்டுக்கு இலக்காகும் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதனால், தாம் அச்சத்துடனையே தொழில் செய்ய வேண்டிய நிலையேற்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, தாம் எதிர்நோக்கம் பிரச்சினைகளுக்கு தோட்ட நிர்வாகம் உடனடியாக தீர்வினை வழங்க வேண்டுமென தோட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜாதிக லொத்தர் மண்டலய
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிறு 2024.08.11
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5562 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.22,364,952.00
ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 5 8 4 2 1 8

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 137 — ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 4 2 1 8

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3804 — சீட்டிழுப்பு திகதி 2024.08.11 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.69,809,283.12
ஆங்கில எழுத்து Z — வெற்றி இலக்கங்கள் 02 13 14 35 — விசேட எழுத்து Z — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 79229

Mega POWER — சீட்டிழுப்பு இலக்கம் 1910 — 2024.08.11 — 16079 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.441,563,646.00
ஆங்கில எழுத்து I — சுப்பர் இலக்கம் 18 — வெற்றி இலக்கங்கள் 04 34 45 57
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.08.11 — சீட்டிழுப்பு இலக்கம் 0388
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 1 0 6 6 1 5
L7 எழுத்து K
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.. 34,230,684.48

ராசி சுப பலன் — திகதி 2024.08.11 — சீட்டிழுப்பு இலக்கம் 871 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.3,729,443.60
வெற்றி இலக்கினம் மிதுனம் — வெற்றி இலக்கங்கள் 09 15 36 53 — தனயோக இலக்கம் 05525 — நாளுக்கான விதி எண் 02

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1592 — 2024.08.11 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 105,939,233.12
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 12 17 29 50 — விசேட எழுத்து K — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 63505

## பழைய மாணவர்களுக்கிடையிலான மாபெரும் கிரிக்கட் சுற்றுப் போட்டிக்கு அழைப்பு

பழைய மாணவர்களுக்கிடையிலான மாபெரும் கிரிக்கட் சுற்றுப் போட்டியும் ஒன்றுகூடலும் எதிர்வரும் 17ஆம், 18ஆம் மற்றும் 19ஆம் திகதிகளில் க/லூல்கந்துர தமிழ் வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் அனுசரணையோடு மத்திய மாகாணம் கண்டி மாவட்டம் க/லூல்கந்துர தமிழ் வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினால் இந் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதில் பாடசாலை காலங்களில் பல பசுமையான நினைவுகளை மீட்டு பார்க்க, க/லூல்கந்துர தமிழ் வித்தியாலய பாடசாலையின் பழைய மாணவர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.


இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

**வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA)**

**அதிவேக நெடுஞ்சாலைகள் இயக்குதல், பராமரிப்பு மற்றும் நிர்வகித்தற் பிரிவு விலைமனுக்களுக்கான அழைத்தல்**

| ஒப்பந்தப் பெயர் | ஒப்பந்த இலக்கம் அதிவேக நெடுஞ்சாலை | வாகன இனம் மற்றும் எண்ணிக்கை |
|---|---|---|
| அதிவேக நெடுஞ்சாலைகள் இயக்குதல், பராமரிப்பு மற்றும் நிர்வகித்தற் பிரிவின் மத்திய நெடுஞ்சாலைக்காக செயற்பாடு மற்றும் பராமரிப்பு வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல் | RDA/EOM&M/PRC/2024/MECH/20 | • Boom Truck – 01<br>• தண்ணீர் பவுசர் - 02<br>• அடையாள பலகைகளை எடுத்துச் செல்லும் ட்ரக் - 01<br>• ரிப்பர் ட்ரக் - 01<br>• அகழ்தல் பொறி - 01 |
| அதிவேக நெடுஞ்சாலைகள் இயக்குதல், பராமரிப்பு மற்றும் நிர்வகித்தற் பிரிவின் தெற்குத்-திசை நெடுஞ்சாலை நீடிப்பிற்காக பராமரிப்பு வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல் | RDA/EOM&M/PRC/2024/MNT/13 | • அடையாள பலகைகளை எடுத்துச் செல்லும் ட்ரக் - 01<br>• ரிப்பர் ட்ரக் - 01 |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2024.08.13 ஆம் திகதியிலிருந்து 2024.09.02 ஆம் திகதியன்று வரையும் வீஅஅ மற்றும் நெடுஞ்சாலை அமைச்சு ஆகியவற்றின் **www.rda.gov.lk** என்ற இணைய பக்கங்களை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (தொலைபேசி: 038 2289122)

**தலைவர்,**
**பிரதி பணிப்பாளர் நாயகம் (அநெஇபநி பிரிவு) பெறுகைக் குழு,**
**பிரதி பணிப்பாளர் நாயகம் (அநெஇபநி பிரிவு) பெறுகைக் குழு மே/பா.,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கஹட்டகஹஹேன, வல்கம,**
**பண்டாரகம.**



நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

நகர அபிவிருத்தி அதிகார சபை

**விலைமனுக்களுக்கான அழைப்பு**

**நகர அபிவிருத்தி அதிகாரச் சபைக்குச் சொந்தமான கொழும்பு 07, ரீட் மாவத்தை, குதிரைப் பந்தயத் திடலுக்கு அண்மையில் அமைந்துள்ள சந்தைக் கட்டிடத்தொகுதியிலுள்ள கடை அறைகளை மாதாந்த வாடகை அடிப்படையில் 5 வருட காலத்திற்குக் குத்தகைக்கு வழங்குவதற்காக விலைமனுக்கள் கோரல்**

- பின்வரும் கடை அறைகளை மாதாந்த வாடகை அடிப்படையில் 5 வருட காலத்திற்குக் குத்தகைக்கு வழங்குவதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையின் வருமானக் கேள்விக் குழுவின் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| அமைவிடம் | கடை இல. | தரைப் பரப்பளவு (சதுர அடி) | அடிப்படை விலை (ரூபா) விலைமனுதாரரால் விருப்பத் தெரிவுகளின் கீழ் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் — விருப்பத் தெரிவு 01 — அடிப்படை பெறுமதி - மாதாந்த வாடகை (ரூபா) — அடிப்படை பெறுமதி (மீளளிக்கப் படாத) | விருப்பத் தெரிவு 01 — மாதாந்த வாடகை | விருப்பத் தெரிவு 02 — அடிப்படை மாதாந்த வாடகை (ரூபா) | பிணை முறி (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| கொழும்பு 07, ரீட் மாவத்தை, குதிரைப் பந்தயத் திடலுக்கு அண்மையில் அமைந்துள்ள கட்டிடத்தொகுதியில் உள்ள கடை அறை | **GS-07** (முதலாம் மாடி மற்றும் இரண்டாம் மாடி) | 5000 | 22,723,000.00 | 450,000.00 | 900,000.00 | 540,000.00 |
| கொழும்பு 07, ரீட் மாவத்தை, குதிரைப் பந்தயத் திடலுக்கு அண்மையில் அமைந்துள்ள கட்டிடத்தொகுதியில் உள்ள கடை அறை | **MS-3A** (தரை மாடி) | 1720 | 5,200,000.00 | 245,000.00 | 350,000.00 | 210,000.00 |

- இந்த கடை அறைகள் மாதாந்த வாடகை அடிப்படையில் 05 வருட காலத்திற்கு ஒதுக்கப்படும். விலைமனுதாரர்கள் தமது விலைக்கோரலுக்காக மேற்கூறப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள இரண்டு விருப்பத் தெரிவுகளில் ஒன்றைத் தெரிவு செய்தல் வேண்டும்.
  - ❖ கேள்வி ஆவணங்கள் 2024 ஆகஸ்ட் 14ஆம் திகதி முதல் 2024 செப்டெம்பர் 04ஆம் திகதி 2.30 வரை வழங்கப்படும்.
  - ❖ விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் 2024 செப்டெம்பர் 06ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முடிவுறுத்தப்படும்.
- இந்த கேள்விக்கு இயைபான ஏனைய தகவல்கள் கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
- இதில் ஆர்வம் காட்டும் விண்ணப்பதாரர்கள் மேலதிக விபரங்களை உள்ளடக்கிய விண்ணப்பப் படிவங்களை மீளளிக்கப்படும் 10,000.00 ரூபா தொகை + 2.5% சமூக பாதுகாப்பு பங்களிப்பு + 18% பெறுமதிசேர் வரியையும் (VAT) செலுத்தி பத்தரமுல்ல, ''செத்சிறிபாய'', 8ஆம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஆதன அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பிரிவிலிருந்து மேற்கூறப்பட்ட காலத்தினுள் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம். மேலும் இந்த காலப்பகுதியில் கேள்வி விண்ணப்பங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
- இது தொடர்பிலான மேலதிகத் தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் தேவையாயின் பத்தரமுல்ல, ''செத்சிறிபாய'' கட்டம் 1, 8ஆம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஆதன அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளரிடமிருந்து (தொ.பே. 011-2875921, 011-2875916-20 நீடிப்பு 2960 - 2968) அலுவலக நேரத்தினுள் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் விசாரித்தறியலாம்.

**தலைவர், வருமானக் கேள்விக் குழு (சிறிய),**
**நகர அபிவிருத்தி அதிகார சபை.**
**செத்சிறிபாய கட்டம் 1, பத்தரமுல்ல.**

# கிழக்கின் குரல்



# 85ஆயிரம் தமிழர்களின் வாக்குகள் இருந்தும் அம்பாறையில் தமிழ் எம்.பி ஒருவர் இல்லை

## பாராளுமன்ற பிரதிநிதித்துவம் மூலமே தீர்வு என்கின்றார் ஆளுநர் செந்தில்

(வாச்சிக்குடா விஷேட நிருபர்)



அம்பாறை மாவட்டத்திலிருந்து தமிழ் பிரதிநிதியொருவரை பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்வதன் மூலமே அப்பகுதி மக்களுக்கான நிரந்தர தீர்வை பெற முடியும் என கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்திலுள்ள 225 கதிரைகளில் ஒரு கதிரையில் அமர்ந்திருப்பதற்காக மாத்திரம் நாம் ஒருவரை வாக்களித்து அங்கு அனுப்புவதில்லை. நமது குறைகளை கேட்டறிந்து தீர்த்து வைப்பதற்காகவே அனுப்புகின்றோம். இதில் அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் 85 ஆயிரம் வாக்குகளை வைத்துக்கொண்டு ஒருவரை கூட தெரிவு செய்யவில்லை என்பது வியப்பளிக்கின்றது.

ஆளுநர் எனும் அடிப்படையில் என்னால் முடிந்த உதவிகளை நான் செய்வேன். ஆனால் அது நிரந்தர தீர்வாகாது. உங்களுக்கான ஒரு பிரதிநிதியை தெரிவு செய்வதன் மூலமே நிரந்தர தீர்வை பெற முடியும்.

ஆகவே அனைவரையும் ஒன்று திரட்டி ஒரு பொதுவான சின்னத்தின் கீழ் தேர்தலில் போட்டியிட அரசியல்வாதிகளுக்கு அழுத்தம் கொடுப்பது இங்குள்ள பொது அமைப்புக்களின் கடமை. அவ்வாறு செய்யாவிட்டால் உங்களால் சிறிய பிரச்சினைகளுக்கு கூட தீர்வு பெற்றுக் கொள்ள முடியாது. மற்றவர்களிடம் கையேந்தும் நிலையே உருவாகுமென அவர் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் கல்வி அதிகாரிகள், ஆலய தலைவர்கள், வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினர் என பல அமைப்புகளின் பிரதிநிதிகள் தங்களது கோரிக்கைகளை ஆளுநரிடம் சமர்ப்பித்தனர். முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு உடன் தீர்வை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக ஆளுநர் உறுதியளித்தார். இறுதியாக ஆளுநர் அக்கரைப்பற்று இந்து இளைஞர் மன்றத்தினரால் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# சித்தானைக்குட்டி சுவாமியின் 73ஆவது குருபூஜை

(காரைதீவு குறூப் நிருபர்)



சித்தருள்சித்தர் ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமியின் 73 ஆவது குருபூஜையும், அன்னதானமும் காரைதீவு ஸ்ரீ சித்தானைக்குட்டி ஆலயத்தில் நேற்றுமுன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் காலை முதல் பஜனை, கூட்டுப்பிரார்த்தனை நடைபெற்று தொடர்ந்து ஆலய குரு சிவ ஸ்ரீ தியாகராஜ குருக்கள் குருபூஜையை நடாத்தினார்.

இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபட்டனர். முடிவில் பாரிய அன்னதானம் நடைபெற்றது.

ஆலய பரிபாலன சபை தலைவர் சி.நந்தேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக்குருபூஜை நேற்று 12 ஆம் திகதி இடும்பன் பூஜையுடன் நிறைவடைந்தது.

# முகமூடி அணிந்து கொள்ளை

முகமூடி அணிந்த நபரொருவர் பெண்ணை தாக்கி விட்டு நகைகளை கொள்ளையடித்து சென்ற சம்பவமொன்று சம்மாந்துறை பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

அம்பாறை சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீட்டில், அதிகாலை வேளை மூன்று மணியளவில் உறங்கிக் கொண்டிருந்த பெண்ணை தாக்கி விட்டு முகமூடி அணிந்த நபர் ஒருவர் நகைகளை கொள்ளையடித்து சென்றதாக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் (11) முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாட்டுக்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத்தின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

# பொத்துவில் ஆதார வைத்தியசாலை சுகாதார அமைச்சின் பொறுப்பில்

## சகல வசதிகளுடனும் அபிவிருத்தி

(ஒலுவில் விசேட நிருபர்)

கிழக்கு மாகாண சபையின் சுகாதார அமைச்சின் கீழ் உள்ள பொத்துவில் ஆதார வைத்தியசாலையை மத்திய அரசாங்கத்தின் சுகாதார அமைச்சின் கீழ் கொண்டு வந்து விசேட பராமரிப்பு வசதிகளுடன் ஒருங்கிணைந்த சுகாதார வைத்தியசாலையாக ஆகஸ்ட மாதம் 01 திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் கையேற்கப்பட்டுள்ளதாக அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி டாக்டர் ஐ.எல். எம்.றிபாஸ் தெரிவித்தார்.

இது தொடர்பான சுற்று நிருபம் சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் பி.ஜி. மஹிபாலவினால் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பொத்துவில் ஆதார வைத்தியசாலையினை சுற்றுலாப் பயணிகளுக்கான கட்டணம் செலுத்தும் விடுதிகள், அந்திமலி நிவாரணச் சிகிச்சை, முதுமைப் பராமரிப்பு சேவைகள் மற்றும் மருத்துவச் சுற்றுலாத்துறைக்கான ஆயுர்வேத சிகிச்சை வசதிகள் ஆகியவற்றைக் கொண்ட ஒருங்கிணைந்த சுகாதார சேவைக்கான ஆதார வைத்தியசாலையாக முன்மொழியப்பட்டிருந்தது.

அமைச்சரவை தீர்மானத்திற்கமைவாகவும், கிழக்கு மாகாண ஆளுநரின் ஒப்புதலுக்கமைவாகவும் இவ்வைத்தியசாலை மத்திய அரசாங்கத்தின் சுகாதார அமைச்சினால் கையேற்கப்பட்டுள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

பொத்துவில் ஆதார வைத்தியசாலையை சுகாதார அமைச்சுக்குக் கையகப்படுத்தியதன் மூலம் வைத்தியசாலை ஊழியர்களை உள்வாங்குவது பொதுச்சேவை ஆணைக் குழுவின் பரிந்துரைகளின் படி மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸாரப், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் விடுத்த கோரிக்கைக்கமைய இவ்வைத்தியசாலையை மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டு வந்து அபிவிருத்தி செய்வதற்காக சுகாதார அமைச்சினால் கையேற்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் பொத்துவில் ஆதார வைத்தியசாலையை மத்திய அரசாங்கத்தின் சுகாதார அமைச்சின் கீழ் கொண்டு வர வேண்டும் என திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கரங்களை பலப்படுத்த வேண்டியது அனைவரினதும் பொறுப்பு

## விமலவீர திசாநாயக்க எம்.பி

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியை இனி எவராலும் கட்டியெழுப்ப முடியாது. எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற வேண்டும்.

ஏனெனில் அவர் வெற்றி பெற்றால் தான் நாடு வெற்றி பெறும் என பொதுஜன பெரமுனவின் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விமலவீர திசாநாயக்க தெரிவித்தார்.

அம்பாறையில் அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருந்த வேளையில் தற்போது வீரவசனம் பேசுபவர்கள் எவருமே அரசாங்கத்தை பொறுப்பெடுக்க முன்வரவில்லை.

நாடு தீப்பற்றி எரிந்து கொண்டிருந்த போது நிபந்தனைகளை விதித்துக் கொண்டிருந்தனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே தனது வீடு தீப்பற்றியதை கூட பொருட்படுத்தாது தனது அரசியல் எதிர்காலத்தைக் கூட கருத்திற் கொள்ளாது எந்தவித நிபந்தனையுமின்றி நாட்டை பொறுப்பேற்றார்.



அவர் பொறுப்பேற்று குறுகிய காலத்துக்குள் நாடு இயல்புநிலைக்கு திரும்பியது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

2022 ஆம் ஆண்டு வரிசை யுகம் இப்போது காணப்பட்டால் எவரும் தேர்தல் பிரசாரங்களை செய்ய முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கும் என்பதை ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகள் நினைவில் கொள்ள வேண்டும்.

பொதுஜன பெரமுன வெற்றிப் பெற்றால் நானும் மகிழ்ச்சியடைவேன். ஆனால் இது இப்போதைய கள நிலவரத்தில் சாத்தியமில்லை. பொதுஜன பெரமுன கட்சியை இனி எவராலும் கட்டியெழுப்ப முடியாது. அதன் கதை முடிந்துவிட்டது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற்றால் தான் எமது நாடும் வெற்றிபெறும். பொருளாதார நெருக்கடியிலிருந்து மிகக்குறுகிய காலத்தில் மீட்சி பெறுவதற்கான உறுதியான நிலையான கட்டமைப்பை மாற்றியமைக்காமல் இருந்திருந்தால் தண்டவாளத்தில் விலகிய புகையிரதம் போல் நாடு தடம்புரண்டிருக்கும்.

நாட்டை தொடர்ந்தும் ஸ்திரமான பொருளாதார நிலையில் பேண ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கரத்தை பலப்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பு எம்மிடம் உண்டு.

# அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் குருதி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய நடவடிக்கை

(அக்கரைப்பற்று விஷேட நிருபர்)



அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் நிலவும் குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டு, வைத்தியசாலை நிர்வாகம் சமூக, சமய நிறுவனங்களின் ஒத்துழைப்பை நாடியுள்ளது.

அதற்கமைய அக்கரைப்பற்று அஹ்லுஸ் ஸுன்னா ஜும்ஆ பள்ளிவாசல் ஜமாஅத்தினரால் இரத்ததான முகாமொன்று நேற்றுமுன்தினம் காலை முதல் மாலை வரை நடைபெற்றது.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் நோயாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்யவதற்காக மாதாந்தம் இருநூற்று ஐம்பது பைந் இரத்தம் தேவைப்படுகின்றது. இதனை நிவர்த்தி செய்வதற்காகவே சமூக, சமய நிறுவனங்களிடமிருந்து குருதி நன்கொடை பெறப்படுகின்றது.

பள்ளிவாசல் நிர்வாகத்தினரால் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வைத்தியசாலைக்கு 170 பைந் இரத்தம் வழங்கி வைக்கப்பட்டன. நேற்றைய நாளிலும் அவ்வாறான அளவு குருதி நன்கொடை கிடைக்கும் என பள்ளிவாசல் நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.

பள்ளிவாசல் நிர்வாக சபையின் தலைவர் எஸ். எம். ஹமீட் மௌலவியின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை இரத்த வங்கி வைத்திய அதிகாரி டொக்டர் ஏ. ஏ. எப். மஸீறா, கல்முனை வடக்கு இரத்த வங்கி வைத்திய அதிகாரி டொக்டர். கை. ஹரிஸானன்த் ஆகியோருடன், தாதிய உத்தியோகத்தர்களும், பணியாளர்களும் கலந்துகொண்டு இரத்த நன்கொடைகளைப் பெற்றுக்கொண்டனர்.

# கல்முனை பிரதேசத்தில் பாடசாலை மாணவர்களுக்கு மருத்துவ பரிசோதனை

(அம்பாறை மத்திய தினகரன் நிருபர்)



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையும் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமும் இணைந்து கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் தரம் 06, 07 மற்றும் 10 பிரிவுகளிலுள்ள மாணவிகளை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தினர்.

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக மேற்பார்வை சுகாதார பரிசோதகர் ஏ.எம். பாறூக் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல், கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.எப். டொக்டர் ஸஹ்றா சரப்தீன், டொக்டர். ஏ. ஆர். எம். அஸ்மி, கல்லூரி அதிபர் ஏ.பி. நஸ்மியா சனூஸ், பிரதி அதிபர் என். டி நதீகா, பகுதித் தலைவிகள், தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், ஆசிரியர்கள், மாணவிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியின் பழைய மாணவர் ஒன்றுகூடலும் ரீசேட் அறிமுக நிகழ்வும்





கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி பழைய மாணவர்களின் தொடர்பை கல்லூரியுடன் தொடர்புபடுத்தும் வகையில் 2001/2004 காலப்பகுதியில் கல்லூரியில் உயர்தர வகுப்புகளில் கல்வி கற்ற மாணவர்களின் ஒன்றுகூடலும் ரீ சேட் அறிமுக நிகழ்வும் அண்மையில் நிந்தவூர் அட்டப்பள்ளம் ஒஸாகா உல்லாச விடுதியில் நடைபெற்றது.

(எம்.எம்.ஜெஸ்மின்)

# திகாமடுல்ல மாவட்டத்தில் தபால் மூலம் வாக்களிக்க 25,000 பேர் தகுதி

(அக்கரைப்பற்று விஷேட நிருபர்)

திகாமடுல்ல மாவட்டத்தில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க 25,000 வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலின் போது மாவட்டத்திலிருந்து ஐந்து இலட்சத்து ஐம்பத்தையாயிரத்து நானூற்று முப்பத்து இரண்டு பேர் (555,432) வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

அம்பாறை தொகுதியில் 188,222 வாக்காளர்களும் சம்மாந்துறை தொகுதியிலிருந்து 99,727 வாக்காளர்களும், கல்முனை தொகுதியிலிருந்து 82,830 வாக்காளர்களும், பொத்துவில் தொகுதியிலிருந்து 184,653 வாக்காளர்களும் வாக்களிக்கத்தகுதி பெற்றுள்ளனர்.

மாவட்டத்தில் ஆண் வாக்காளர்களை விட பெண் வாக்காளர்களே அதிகமாகக் காணப்படுகின்றனர். இதன்படி 280,190 பெண் வாக்காளர்களும், 272,013 ஆண் வாக்காளர்களும் பதிவாகியுள்ளனர்.

இங்கு 528 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

தேர்தல் கடமைகளுக்காக ஐயாயிரம் உத்தியோகத்தர்களும், பாதுகாப்பு பணியில் 2500 ஐந்நூறு உத்தியோகத்தர்களும் கடமைகளில் ஈடுபடவுள்ளனர்.

# தமிழ் திறன் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

அனைத்துலகத்தமிழர் கல்வி மேம்பாட்டு பேரவையினால் நடாத்தப்பட்ட தமிழ்த்திறன் போட்டிக்கான பரிசளிப்பு விழா அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு திகே/திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அனுஷியா சேனாதிராஜா தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் திரு. திரவியராஜ், கௌரவ அதிதியாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.கவீந்திரன் கோடீஸ்வரன் உட்பட கல்வியாளர்கள், சமூக ஆர்வலர்கள், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாணவ சாதனையாளர்களுக்கு சான்றிதழ்களும் விருதுகளும் அதிதிகளினால் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டதோடு, தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் அனுஷியா சேனாதிராஜா பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இளந்தளிர் கல்வி நிலையத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் திறமைகளை வெளிக்காட்டும் வகையில் இங்கு கற்பிக்கும் ஆசிரியர்களின் நெறிப்படுத்தலில் மும்மொழியிலான பாடல்கள், நடனங்கள், பேச்சு, கவிதை போன்ற கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

# 15 ஆம் திகதிக்குப் பின்னர் ஜனாதிபதியுடன் எதிர்பாராத பெரும் கூட்டம் ஒன்றிணையும்





ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யப்படும் 15 ஆம் திகதிக்குப் பின்னர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சுற்றி, யாரும் எதிர்பார்க்காத கூட்டம் ஒன்று கூடும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார். அந்த பலத்துடன் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மேலும் ஐந்தாண்டுகள் பதவிக்காலம் வழங்கினால், 2048ஆம் ஆண்டு 20 ஆயிரம் மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான சொத்துக்களை கொண்ட அபிவிருத்தியடைந்த நாடாக ஜனாதிபதி இந்த நாட்டை மாற்றுவார் எனவும் அவர் கூறினார்.

சுயேட்சை வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து, ஹோமாகம, கொடகமவில் இடம்பெற்ற மக்கள் விழிப்புணர்வு கூட்டத்தில் கலந்துகொண்டு இவ்வாறு தெரிவித்த அவர்,

இந்தத் தேர்தலுக்குப் பின்னர் இது சாத்தியமில்லை என்றால், பங்களாதேஷ் போன்றல்ல, நம் நாடு இன்னும் மோசமான படுகுழியில் விழும். 20 ஆண்டுகளுக்குப் பின்னரும் ஆப்கானிஸ்தானை மீட்க முடியவில்லை. இதே கதிதான் ஜிம்பாப்வேக்கும் ஏற்பட்டது. சர்வதேச ஆதரவு இன்றி இது போன்ற நாடுகளை மீட்க முடியாது.

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையின் பிரகாரமே அடுத்த வருடத்திலிருந்து தொடர முடியும். நாடு எப்படி செல்ல வேண்டும் என ஐந்து சட்டங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த ஜனாதிபதித் தேர்தலில் அந்த பஞ்சாயுதத்தை கையில் வைத்துக்கொண்டே போட்டியிடுகிறார்.

இதற்குப் பின்னரும், இலங்கையை யார் ஆட்சி செய்தாலும் சரி, பணம் அச்சிட முடியாது. பணமதிப்பழிப்புக்கு தடை விதித்து, மத்திய வங்கிச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. நினைக்கும் போதெல்லாம் ஏனைய நாடுகளிடமிருந்து கடன் வாங்கவும் முடியாது.

மேலும், அரசியல்வாதிகள் தங்கள் விருப்பப்படி பட்ஜெட் தயாரிக்க முடியாது. அடுத்ததாக, 2032க்குள், நமது மொத்த தேசிய உற்பத்தியை, 95 சதவீதமாக குறைக்க வேண்டும் என்பது, மூன்று முக்கிய நிபந்தனைகள். அரசாங்கம் என்ன சொன்னாலும், மொத்த நிதி வருமானம், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 13 சதவீதத்தை தாண்ட முடியாது. அரசாங்கம் விரும்பியபடி பணத்தை செலவிட முடியாது. கடன் தவணைகள் மற்றும் வட்டி செலுத்துதல்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.5 க்கு மேல் இருக்கக்கூடாது. ஒவ்வொரு ஆண்டும் முதன்மைக் கணக்கின் பட்ஜெட்டில் 2.3 கையிருப்பு இருக்க வேண்டும்.

இந்த நாட்டில் பயங்கரவாத யுத்தம் இடம்பெற்றபோது, அரசாங்கத்தை நடத்துவதற்கும் பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவுக்கு அதிக பலம் தே வைப்பட்டது. அப்போது மிகவும் பலவீனமான ஆட்சி இருந்தது. அங்கு முன்னாள் சபாநாயகரும், நாட்டை உண்மையாக நேசிக்கும் பௌத்த மக்கள் தலைவருமான கரு ஜயசூரிய, ஐக்கிய தேசியக் கட்சியின் காமினி லொக்குகேயும், நாங்களும் இணைந்து மகிந்த ராஜபக் ஷவுக்கு பலமாக செயற்பட அமைச்சர் பதவிகளை பெற்றோம். இதன் விளைவாக, நாட்டைப் பிளவுப்படுத்தாமல், சிங்கள, தமிழ், முஸ்லிம், பர்கர் மக்கள் ஒரே இடத்தில் வாழ தேவையான தீர்மானங்களை மேற்கொண்டு நாட்டைக் காப்பாற்றும் பாரிய பொறுப்பை ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ நிறைவேற்றினார்.

மஹிந்த காற்றை உருவாக்கி அவரை மீண்டும் ஆட்சிக்கு கொண்டுவருவதற்காக நாடு முழுவதும் பாடுபட்டு பெரும் அர்ப்பணிப்பை செய்தோம்.

ஹோமாகம மக்கள் தங்கள் சொந்தப் பணத்தைச் செலவழித்து என்னுடன் ஒன்று சேர்ந்தனர். நான் பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் ஏனைய தலைவர்களுடன் மொட்டு கட்சி சார்பாக நாடு முழுவதும் உள்ள மேடைகளில் பேசினேன். கட்சியின் தலைவர் ஜீ.எல்.பீரிஸுடன் இணைந்து பொருளாதார ஆய்வுப் பிரிவை நிறுவி நல்லாட்சி அரசாங்கத்தின் நெருக்கடிகளை வாரந்தோறும் வெளிப்படுத்துவதில் பெரும் பங்காற்றினேன்.

பின்னர், முழு நாடும் ஒன்றிணைந்து அந்த அரசாங்கத்தை விரட்டியடித்தது, பெரும் நம்பிக்கையுடன், நீங்கள் அனைவரும் என்னுடன் தேர்தல் பிரச்சாரத்தின் போது, கோத்தபாய ராஜபக் ஷவை ஆட்சிக்குக் கொண்டு வர வேண்டும் என 6 இலட்சத்து ஆறாயிரம் வாக்குகளை வழங்கியவர்கள்,

நாட்டில் ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்த மகிந்த ராஜபக் ஷ பிரதமரானார். நான் அமைச்சரவை அமைச்சரானேன். புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது.

ஆனால், உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னரான நீண்டகால நிலைமை மற்றும் பொருளாதாரச் சரிவு காரணமாக, சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வராமையால், நாடு கடுமையான நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாக சர்வதேச நிபுணர்கள் மற்றும் உள்ளூர் அறிஞர்கள் அவரிடம் சுட்டிக்காட்டினர்.

இந்த சூழ்நிலையின் அடிப்படையில், தேர்ந்தெடுக்கப்பட்ட சர்வதேச நிறுவனங்களின் ஆதரவுடன் சர்வதேச நாணய நிதியத்தை அணுக வேண்டியிருந்தது. அப்போது அமைச்சரவை இரண்டாகப் பிரிந்தது.வாசுதேவ நாணயக்கார உள்ளிட்ட கடும்போக்காளர்கள் குழு இதனை கடுமையாக எதிர்த்தது. அந்த நிலைமை காரணமாக கோட்டாபய ராஜபக் ஷவினால் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல முடியவில்லை. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் வீதியில் உயிரிழந்தார். எனது வீடு எரிக்கப்பட்டது. எங்கள் கட்சி அலுவலகமும் அழிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கானோர் ஒடுக்கப்பட்டனர். 2048ஆம் ஆண்டுக்குள் அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின்படி செயற்படுவதற்கும் நிறைவேற்றுவதற்கும் உத்தரவாதம் அளிக்கும் ஒருவரை ஜனாதிபதி தேர்தலில் ஆதரிக்க வேண்டும் என இவ்விடயத்தில் தீர்மானங்களை எடுத்த அமைச்சர்கள் என்ற வகையில் முடிவுசெய்தோம். அதனடிப்படையில், கட்சி வேறுபாடின்றி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு அளிப்பதாக அறிவித்தோம். நாட்டை மீண்டும் ஒருமுறை உயர்த்துவதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து, சுயேச்சை வேட்பாளரான அவரை வெற்றிபெறச் செய்ய ஆதவரவளிக்க வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன்.

# ஜனாதிபதியின் அரசியல் அனுபவம் நாட்டை வீழ்ச்சியிலிருந்து மீட்க உதவியது





ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அனுபவமும், சர்வதேச உறவுகளும், வேலைத்திட்டங்களும் இந்த நாட்டை மீட்பதற்கு வழிவகுத்துள்ளதாக ஜனாதிபதியின் தலைமை செயலணி அதிகாரியும் சிரேஷ்ட ஜனாதிபதி பாதுகாப்பு ஆலோசகருமான சாகல ரத்நாயக்க ஹோமாகமவில் நேற்று (12) தெரிவித்தார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதற்காக ஹோமாகம தொகுதியின் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதம அமைப்பாளர் சட்டத்தரணி ரங்க அபேசிங்க ஏற்பாடு செய்திருந்த விசேட அங்கத்தவர் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

எமக்கு எவ்வளவு அரசியல் அனுபவம் இருந்தாலும், எத்தனை சர்வதேச உறவுகள் இருந்தாலும் எமக்கு திட்டம் இல்லையென்றால், எம்மால் கடந்து செல்ல முடியாது. ஜனாதிபதிக்கு ஒரு திட்டம் இருந்தது. எனவே, அச்சமின்றி இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. மக்களும் ஆதரித்தனர். அதனால்தான் இவ்வளவு சீக்கிரம் மீண்டு வர முடிந்தது.

அதேநேரத்தில் எரிவாயு இல்லை, எண்ணெய் இல்லை, மருந்து இல்லை, நம் நாடு முற்றிலும் வீழ்ச்சியடைந்தது. பல தலைவர்கள் காணாமல் போயிருந்தவேளையில் ரணில் விக்கிரமசிங்கவே முன்வந்தார். கட்சி வேறுபாடின்றி அனைத்து எம்பிக்களும் அவருக்கு ஆதரவு தெரிவித்தனர். அதனால் வீழ்ந்திருந்த நாட்டை பாதாளத்திலிருந்து மீட்க முடிந்தது.

நமது நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் தேர்தலுக்கு தயாராகி வருகிறோம். ரணில் விக்கிரமசிங்க எங்கள் கட்சியின் தலைவர். ஆனால், இம்முறை அனைவரினதும் தலைவராக கட்சியின்றி, சுயேட்சை வேட்பாளராக போட்டியிடுகின்றார்.

பாராளுமன்றத்தில் எமது கட்சிக்கு ஒரேயொரு உறுப்பினரே இருந்தபோது, பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையினரின் நம்பிக்கையை வெல்லும் திறமை ரணில் விக்கிரமசிங்கவுக்கே இருந்தது. அந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே அவர் இந்த நாட்டின் தலைவரானார்.

நாடு ஒரு இக்கட்டான நிலைக்குச் சென்றுவிட்டது. பொருளாதாரத்தில் நாம் முற்றிலும் வீழ்ச்சியடைந்தோம்.

பல கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு அவரது வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு பலமளித்தன. கட்சி சார்பற்று இரண்டு ஆண்டுகள் பணியாற்றினார். அதன் காரணமாகவே அவரால் நாட்டை ஸ்திரப்படுத்த முடிந்தது.

இந்த நாட்களில் பங்களாதேசத்தில் நடப்பதை பார்க்கும் போது, அக் காலம் மீண்டும் நினைவுக்கு வருகின்றது. உணவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. அதில் இருந்து எம்மைக் காப்பாற்றியவர் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே.

அவரது அரசியல் அனுபவம், பாரம்பரியம், சர்வதேச உறவுகள், வேலைத்திட்டம் போன்றவற்றின் காரணமாகவே, இந்த நாட்டை அவரால் கட்டியெழுப்ப முடிந்தது. எமக்கு எவ்வளவு அரசியல் அனுபவம் இருந்தாலும், எத்தனை சர்வதேச உறவுகள் இருந்தாலும், திட்டம் இல்லையென்றால், எம்மால் கடந்து செல்ல முடியாது.

அவர் ஒரு திட்டத்தை வைத்திருந்தார். அதனை அச்சமின்றி செயல்படுத்தினார். இதற்கு மக்களும் ஆதரவளித்தனர். அதனால்தான் இவ்வளவு விரைவாக மீண்டுவர முடிந்தது. முதலாவதாக அவரது தலையீட்டினால் பல நாடுகளின் உதவியோடு சிறுபோகத்திற்கு தேவையான உரங்களை பெற முடிந்தது. மிகக் கடினமான நடவடிக்கைகளை மேற்கொண்டே, இந்த நாட்டை தற்போதைய நிலைக்குக் கொண்டுவரக்கூடிய திறன் அவருக்கு இருந்தது.

அக் காலப்பகுதியில் ஜனாதிபதி ஒரு கட்சியுடன் இணைந்து செயற்படவில்லை. அது அரசியல் ரீதியாக எங்கள் கட்சிக்கு இழப்பு. ரணில் விக்கிரமசிங்க அவர்கள் நாட்டின் ஜனாதிபதியாக பதவியேற்று எமது கட்சியின் தலைவராக இருந்தபோது, மொட்டுக்கட்சி அமைச்சர்கள் எம்மை முந்திச்சென்றபோது எமக்கு வருத்தம் ஏற்பட்டது. ஆனால், அனைவரும் ஒன்றிணைந்து அவரை ஜனாதிபதியாக்கினார்கள். இப்போது மீண்டும் அதனையே நாம் செய்ய வேண்டும். இம்முறையும் அதை நாம் முன்னின்று செய்ய வேண்டும். ஆனால் மற்றவர்களை ஒதுக்கி வைப்பதும் நல்லதல்ல. அவ்வாறு செய்யக்கூடாது. இந்தப் பயணத்தில் நாம் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும். நாம் தொடர்ந்து தலைமைக்கு உதவ வேண்டும். நாம் விரும்பும் இடத்தில் அதைச் செய்ய வேண்டும். நாம் ஒரு நாற்காலியை பின்னால் நகர்த்தி யாரையாவது அனுமதிக்க விரும்பினால், நாம் அதை அனுமதிக்க வேண்டும். இவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து எமது தலைவரை நாட்டின் தலைவராக மாற்றியமைத்துள்ளனர். அதனை நாம் மீண்டும் சாத்தியப்படுத்த வேண்டும்

இன்னும் மூன்று ஆண்டுகளுக்கு சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து பணியாற்ற விரும்புகிறோம். அவர்களின் ஒப்பந்தத்தின் படி, நாங்கள் செயற்படுகின்றோமா என்பதை ஐஎம்எப் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை கண்காணித்து வருகிறது. மேலும், சர்வதேச நாணய நிதியத்தின் விதிகளை மீறினாலோ, ஒப்பந்தத்தின்படி செயல்படவில்லையென்றாலோ, மீண்டும் ஒரு புதிய ஒப்பந்தத்திற்கு இணங்குவதற்கு தாமதமாகும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி செயற்படாவிட்டால், மார்ச் மாதத்திற்குள் மீண்டும் பாதிப்பைச் சந்திக்க நேரிடும். நாங்கள் மீண்டும் வீதிக்குச் சென்றால், வரிசையில் நின்றால், வீடுகளுக்குள் செல்ல வழியின்றி அங்கேயே நிற்க நேரிடும். எமக்கு உதவுவதற்கு யாரும் முன்வர மாட்டார்கள். சர்வதேச நாணய நிதி உதவி நிறுத்தப்பட்டால், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் உதவுவதை நிறுத்திவிடும். இவை நிறுத்தப்படுமாகயிருந்தால், எமது அந்நிய செலாவணி கையிருப்பும் நின்றுவிடும். சர்வதேச நம்பிக்கை மறுபுறம் சரிந்து விடும். நாம் மீண்டும் 2022 இல் இருந்த பழைய இடத்திற்குச் செல்ல நேரிடும். சுற்றுலாப் பயணிகளின் வருகையும், அந்நியச் செலாவணி வருமானமும் நின்றுவிடும். நாம் மீண்டும் சிக்கிக்கொள்ள முடியாது. இந்தப் பயணத்தை நாம் வெற்றிகரமாகச் செல்ல வேண்டும். கிராம மக்களுக்கு உண்மைகளை விளக்கி இந்த அபாயம் குறித்து நன்கு தெரிவிக்க வேண்டும். பங்களாதேஷின் நிலைமைக்கு அப்பாற்பட்ட நிலைக்கு நம் நாடு செல்லும். அந்த நிலைக்கு நாம் திரும்ப முடியாது. எனவே, ரணில் விக்கிரமசிங்கவை வெற்றி பெறச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கிளிநொச்சி மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கம் நடத்திய

# 16 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்ளுக்கான வலைப்பந்தாட்ட இறுதிப்போட்டி நிறைவு

*16 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்ளுக்கிடையிலான, அமரர் இ.விக்கினேஸ்வரமூர்த்தி ஞாபகர்த்த வலைப்பந்தாட்ட இறுதிப்போட்டி நேற்று முன்தினம் (11) நடைபெற்றது.*

*கிளிநொச்சி மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்ட இப்போட்டி, கிளிநொச்சி பொது விளையாட்டு மைதான உள்ளக அரங்கில் நடைபெற்றது.*





*மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தின் உபதலைவர் சந்தனம் பெர்னாண்டோ தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், பிரதம விருந்தினராக மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்முரளீதரன், சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் M.மோகனதாஸ் மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி, கௌரவ விருந்தினராக கரைச்சி மற்றும் பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.இந்த இறுதிப்போட்டியில் கிளிநொச்சி பரந்தன் இந்து மகா வித்தியாலயம் மற்றும் புனித சென் திரேசா பெண்கள் கல்லூரி என்பன மோதிக்கொண்டன. இதில், 22 க்கு 18 என்ற கோல் கணக்கில் புனித திரேசா பெண்கள் கல்லூரி, பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தை வீழ்த்தி முதல் இடத்தைப் பெற்றுக்கொண்டது.*

*மூன்றாவது இடத்தை முட்கொம்பன் மகா வித்தியாலயம் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.*

# புகையிரதத்தில் டீசல் திருடிய கும்பலுக்கு புகையிரத ஊழியர்களும் உடந்தையா?

## விசாரணைகள் ஆரம்பம்

**பருத்தித்துறை விசேட நிருபர்**

*யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் புகையிரதத்தில், டீசல் திருடிய கும்பல் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*காங்கேசன்துறை புகையிரத நிலையத்தில், கடந்த 09 ஆம் திகதி இரவு தரித்து நின்ற புகையிரதத்தில், இனந் தெரியாத குழுவொன்றினால் டீசல் திருடப்பட்டுள்ளது.*

*இதனை, கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த அதிகாரிகள் அவதானித்துள்ளதையடுத்து, திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டிருந்த கும்பல் தப்பிச்சென்றுள்ளனர்.*

*இதன்போது, சுமார் நான்கு, 20 லீற்றர் கொள்கலன்களில் டீசல் நிரப்பப்பட்டுள்ள நிலையில் அவை கைப்பற்றப்பட்டுள்ளன.*

*இதேவேளை, புகையிரத எரிபொருள் தாங்கியின் திறப்புக்கள் அனுராதபுரத்திலேயே இருப்பதாக கூறப்படும் நிலையில், குறித்த திருட்டுக்கு புகையிரத நிலைய ஊழியர்களும் உடந்தையாக செயற்பட்டார்களா? என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.*

*தொடர்ச்சியாக எரிபொருள் தாங்கியில் இருந்து எரிபொருள் திருடப்பட்டு வந்த நிலையில், இச் சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறை பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.*

# சேவை நலன் பாராட்டு நிகழ்வு





வத்தேகம கல்வி வலயத்திற்குட்பட்ட மடுல்கலை மாவுசா தமிழ் வித்தியாலயத்தின் கடமையாற்றி ஓய்வு நிலை அடைந்த திருமதி கௌசல்யா ஆசிரியருக்கான சேவை நலன் பாராட்டு விழா பாடசாலை அதிபர் எஸ்.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் அதிபர் தலைமை உரையாற்றுவதையும் ஓய்வு நிலை ஆசிரியரை கௌரவிப்பதையும் கலந்து கொண்டவர்களையும் காணலாம். **(நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)**

# நகர்வலம்



## வடமேல் மாகாண சபை வளாகத்திலுள்ள சிற்றுண்டிச்சாலையை பார்வையிட்ட ஆளுநர்

**(புத்தளம் தினகரன் நிருபர்)**





வடமேல் மாகாண சபையின் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலை ஊழியர்களின் வருமானம் மற்றும் வாழ்வாதாரம் குறித்து ஆளுநர் நஸீர் அஹமட் நேரில் சென்று கேட்டறிந்தார்.

வடமேல் மாகாணத்தில் உள்ளடங்கியுள்ள புத்தளம், குருநாகல் மாவட்டங்களில் தூரப்பிரதேசங்களிலிருந்து மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் தங்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக நாளாந்தம் நூற்றுக் கணக்கான மக்கள் மாகாண சபை அலுவலக வளாகத்திற்கு வந்து செல்கின்றனர்.

இவர்களுக்கு குறைந்த விலையில் தரமான உணவுகள் வழங்கப்பட வேண்டும் என்பதை அடிக்கடி வலியுறுத்தி வந்த ஆளுநர் நஸீர் அஹமட், திடீரென சிற்றுண்டிச் சாலைக்கு கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டதோடு சிற்றுண்டிச்சாலைக்கு வருகை தந்திருந்த பொது மக்களின் கருத்துக்களையும் குறைபாடுகளையும் கேட்டறிந்து கொண்டார்.

மாகாண சபை அலுவலக தொகுதிக்கு வரும் பொதுமக்கள் மற்றும் அலுவலகர்கள் தங்கள் பொருளாதார வசதிக்கேற்ப தரமான உணவுகளை உட்கொள்ளப் பொருத்தமான முறையில் சிற்றுண்டிச்சாலை செயற்படவேண்டும் என்பதை ஆளுநர் இதன்போது வலியுறுத்தினார்.

அதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கு தேவையான விடயங்கள் குறித்தும் சிற்றுண்டிச்சாலை ஊழியர்களிடம் கேட்டறிந்து கொண்டார். மேலும் சிற்றுண்டிச் சாலை ஊழியர்களின் வருமானம், அவர்களின் வாழ்வாதாரம் குறித்த விடயங்களையும் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது தங்கள் சார்பில் சிற்றுண்டிச்சாலை உணவுகளின் தரம் மற்றும் வசதிகளை அதிகரிப்பதற்காக தங்களது சார்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை உடனடியாக ஏற்று அதற்கான உத்தரவுகளைப் பிறப்பித்த ஆளுநருக்கு பொதுமக்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

## அம்பாறை மாவட்ட பிரதம கணக்காளராக ஏ.எல் மஹ்றூப் நியமனம்

**(திராய்க்கேணி தினகரன் நிருபர்)**

அம்பாறை மாவட்டத்தின் பிரதான கணக்காளராக ஏ.எல் மஹ்றூப் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நேற்று (12) மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் உத்தியோகபூர்வமாக தனது கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.பிரதம கணக்காளர் மஹ்றூப் 1999/05/17 இல் கணக்காய்வாளர் சேவை பரீட்சையில் சித்தியடைந்தார். பின்னர், 2002 இல்,இலங்கை கணக்காளர் சேவை பரீட்சையில் சித்தியடைந்து அம்பாறை, சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, கல்முனை, உகன, தமன ஆகிய பிரதேச செயலகங்களில் கணக்காளராக கடமையாற்றினார். கணக்காளர் சேவையில் தரம் ஒன்றுக்கு 2012ஆம் ஆண்டில் தரம் உயர்த்தப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

2018.02.17 முதல் திருக்கோணமலை மாவட்ட பிரதான உள்ளக கணக்காய்வாளரென,பல்வேறு பதவிகளிலும் இவர் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவாக அநுராதபுரத்தில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தை நடத்துவோம்

எஸ்.எம்.சந்திரசேன எம்.பி

**(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)**



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக எதிர்வரும் 17ஆம் திகதி அநுராதபுரத்தில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தை நடத்துவோம் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவுக்கு சவால் விடுத்துள்ளார்.

அநுராதபுரத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் அவ்வாறு தெரிவித்தார்.

எனக்கு பாடம் கற்பிப்பதற்காக அநுராதபுர மாவட்ட தலைவராக நாமல் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார். அனுரகுமார திஸாநாயக்க அநுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். ஆனால் நாமல் ராஜபக்ஷ அம்பாந்தோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தவர். எனக்கு சவாலாக அநுராதபுரம் மாவட்டத்திற்கு நாமல் ராஜபக் ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் மாவட்ட மக்களின் அபிலாஷைகளுக்கு அமைவாகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய செயற்படுவது அரசியல்வாதிகளின் பொறுப்பாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் வகையில் எதிர்வரும் 17ஆம் திகதி அநுராதபுரம் சல்காது மைதானத்தில் கன்னி தேர்தல் பிரசாரக் கூட்டம் நடத்தப்படவுள்ளது. அதற்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளோம்.

ஒவ்வொரு தேர்தலின் போதும் பொதுஜன பெரமுன தேர்தல் பிரசாரக்கூட்டங்களை அநுராதபுரத்தில் தான் நடத்துவது. முடியுமாயின் இம்முறை பொதுஜன பெரமுன கன்னி தேர்தல் பிரசாரக் கூட்டத்தை அநுராதபுரத்தில் நடத்திக் காட்டட்டும் என நாமல் ராஜபக் ஷவுக்கு சவால் விடுப்பதாக எஸ்.எம்.சந்திரசேன மேலும் தெரிவித்தார்.



கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் மூலமாக Stream பயிற்சி நெறியை நிறைவு செய்த ஆசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பயிற்சியை நிறைவு செய்த புத்தளம் பாத்திமா பெண்கள் கல்லூரியின் உப அதிபர் இல்ஹானா வாரிஸ் கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமாரிடமிருந்து சான்றிதழை பெற்றுக் கொள்வதை படத்தில் காணலாம்.

(படம் : புத்தளம் தினகரன் நிருபர்)

## உடப்பு இந்து நெறிக்கழகத்தின் ஏற்பாட்டில் தலயாத்திரை

**(உடப்பு குறூப் நிருபர்)**

உடப்பு இந்து நெறிக்கழகம் ஏற்பாடு செய்யும் வருடாந்த 'தல யாத்திரை' இம்முறையும் ஆரம்பமாகவுள்ளது. வருடா வருடம் நடைபெற்று வரும் இந்த தலயாத்திரைக்கு 20வருடம் பூர்த்தியடைகின்றது.

ஆண்டிமுனை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திலிருந்து எதிர்வரும் 14ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு ஆரம்பமாகி முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகை சமேத ஸ்ரீ முன்னைநாதஸ்வாமி ஆலயத்தை அன்று மாலை வேளையில் பக்தர்கள் வந்தடைவார்கள்.

இவர்கள் பாதையில் செல்லும் போது இடையிலுள்ள முத்துப்பந்தி முத்துமாரியம்மன் ஆலயம், மானாவரி இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலயம், மாயவனாறு சித்தமடம் ஐயனார்ஆலயம், சிலாபம் முத்துமாரியம்மன் ஆலயம், திமிலை கண்ணகி அம்மன் ஆலயம் போன்றவற்றையும் தரிசித்து செல்வார்கள்.

## கல்வி அபிவிருத்தி மன்றத்தின் ஏற்பாட்டில் சாதனை மாணவர்கள் கௌரவிப்பு

**(திறப்பனை தினகரன் நிருபர்)**



தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பாடசாலை மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் கெக்கிராவ பிரதேச சபை கலாசார மண்டபத்தில் கல்வி அபிவிருத்தி மன்ற (EDF) தலைவர் ஓய்வு பெற்ற முன்னாள் விமான நிலைய உதவி கட்டுப்பாட்டாளர் எஸ்.எல். மன்சூர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக குருநாகல் போதனா வைத்திய சாலையின் மகப்பேற்று விசேட வைத்திய நிபுணர் டொக்டர் சாபி சிஹாப்தீன் கலந்துகொண்டார்.

கல்வி அபிவிருத்தி மன்றம் (EDF) ஏற்பாடு செய்த இந்நிகழ்வில் நாட்டில் தெரிவு செய்யப்பட்ட கல்வி வலயங்களைச் சேர்ந்த புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் வரவழைக்கப்பட்டு பாராட்டி சின்னம் அணிவிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்பட்டது.

கல்வி அபிவிருத்தி மன்றத்தின் 20 ஆவது வருட புலமை தாரகை 2024 சஞ்சிகை வெளியீடும் இதன்போது நடைபெற்றது. இச் சஞ்சிகையில் 2023 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் விபரங்கள் மற்றும் புகைப்படங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இவ்வமைப்பின் ஊடாக கடந்த 2023 கல்வி ஆண்டில் தமிழ் மொழி மூலம் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சுமார் 3600ற்கும் மேற்பட்ட மாணவர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

மன்றத்தின் கடந்த 20 வருட சேவையில் சுமார் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பதக்கங்கள் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளனர். கல்வி அபிவிருத்தி மன்றம் என்ற இந்நிறுவனம் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டி கௌரவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஷஹ்மிக்கு மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் அம்ஜாத் வாழ்த்து

**(பேருவளை விசேட நிருபர்)**



நாட்டைச் சுற்றி சமாதான நடைபவனி மேற்கொண்டுவரும் ஷஹ்மி ஷஹீதிற்கு, முன்னாள் மேல்மாகாண சபை உறுப்பினர் அம்ஜாத் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

அவரது வாழ்த்துச் செய்தியில் கூறியதாவது,

சஹ்மியின் சாதனைப்பயணம் , ஏனைய இளைஞர்களும் ஏதாவது ஒன்றில் சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தை விதைத்துள்ளது, மேலும் பிற மாகாண மக்கள் சஹ்மிக்கு வழங்கிய அமோக வரவேற்புக்கு ,மேல் மாகாண மக்கள் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சஹ்மியின் நடைபயணம் அநுராதபுரம் சென்றடையும் போது , நானும் சஹ்மியை சந்தித்து உற்சாகமளிக்கவுள்ளேன், அவர் பயணத்தின் அடுத்த கட்டத்தையும் தடைகள் இன்றி உடல் மற்றும் மன உறுதியோடு முடிப்பதற்கு இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கிறேன் என அவர் தெரிவித்தார்.

கடந்த ஜூலை மாதம் 13 ஆம் திகதி தனது நடைப்பயணத்தை ஆரம்பித்த ஷஹ்மி ஷஹீத் தற்போது யாழ்ப்பாணத்தை சென்றடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் முற்போக்கு கூட்டணியினருடன் எதிர்க்கட்சி தலைவர் உடன்படிக்கை



பெருந்தோட்ட மக்களை வலுவூட்டும் நோக்கில் தமிழ் முற்போக்கு கூட்டணியினருடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார்.

இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், பழனி திகாம்பரம், எம்.உதயகுமார் ஆகியோர் கையொப்பமிட்டனர்.



உடப்பூர் இந்து நெறிக்கழகம் ஏற்பாடு செய்த சுந்தரமூர்த்தி நாயனார் குருபூஜை, ஆடிச்சோதி நிகழ்வுகள் உடப்பூரில் அண்மையில் நடைபெற்றது. அறநெறி மாணவர்களின் ஊர்வலமும் இதன்போது நடைபெற்றது. இந்து நெறிக்கழகத்தின் தலைவர் திரு.பா.முருகானந்தன் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

(படம் : உடப்பு குறூப் நிருபர்)

## இரு கைகளும் கட்டப்பட்ட நிலையில் வயோதிபப் பெண் சடலமாக மீட்பு

**(கற்பிட்டி தினகரன் விசேட நிருபர் )**



புத்தளம் – மதுரங்குளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நல்லாந்தளுவ பகுதியில் வயோதிபப் பெண்ணொருவர் நேற்றுமுன்தினம் (11) மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மதுரங்குளி – நல்லாந்தளுவ பிரதேசத்தில் வசித்து வந்த 71 வயதான செல்ல மரிக்கார் ஐனா உம்மா எனும் மூன்று பிள்ளைகளின் தாயே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்ட வயோதிபப் பெண் நீண்ட காலமாக தனக்கு சொந்தமான இரண்டரை ஏக்கர் தென்னந்தோட்டத்தில் உள்ள வீட்டில் தனிமையில் வசித்து வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை இரவு வீட்டிலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள தனது மகளின் வீட்டுக்குச் சென்றுள்ளதுடன், இரவு நேர உணவை உட்கொண்ட பின்னர் மீண்டும் வீட்டுக்கு வந்துள்ளார்.

8. 2024-08-20ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு (உள்ளூர் நேரம்) கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியிலுள்ள திட்ட பணிப்பாளரின் அலுவலகத்தில் விலைமனுதாரர்களுடனான விலைக்கோரல் முன்னோடிக்கூட்டமொன்று நடைபெறும். இதில் விலைமனுதாரர்கள் கலந்து கொள்ளலாம். (அதிகபட்சம் இரண்டு பிரதிநிதிகள், வேலை கொள்வோருக்கு முன்னறிவித்தல் ஒன்றைச் செய்து பதிவு செய்து கொள்வதன் பேரில்) விலைமனுதாரர்கள் மெய்நிகர் வழியாகவும் கலந்துகொள்ளலாம். நிகழ்நிலை கூட்டத்திற்கான இணைப்பை (Link) வழங்குமாறு நிகழ்ச்சித் திட்டம் பணிப்பாளருக்கு 2024-08-16ஆம் திகதி அல்லது அதற்கு முன் மின்னஞ்சல் மூலம் வேண்டுகோள் ஒன்றைச் செய்தல் வேண்டும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தொழில்வழங்குநரினால் உறுதி செய்யப்பட்ட முன்னேற்பாடொன்றைச் செய்துகொண்டு விலைக் கோரல் முன்னோடிக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர் தள விஜயத்தை மேற்கொள்ளலாம்.
9. 2024-09-03ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணி (உள்ளூர் நேரம்) அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், செயற்றிட்டப் பெறுகைக் குழு, மஹாவலி நீர் பாதுகாப்புக்கான முதலீட்டுத் திட்டம் என முகவரியிட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள், விலைமனுக்கோரல் ஆவணத்தின் ITB 19.1 Bid Data Sheet Section 2 இல் குறிப்பிட்டுள்ளவாறான விலைமனுப் பிணை சகிதம் கொழும்பு-10, டீ. பி. ஜாயா மாவத்தை, இல. 493 1/1, மஹாவலி நீர் பாதுகாப்புக்கான முதலீட்டுத் திட்டம், திட்ட முகாமைத்துவப் பணிமனை, திட்டப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். இதில் விலைமனுதாரர் மெய்நிகர் முறையில் கலந்துகொள்ளலாம் என்பதுடன் இதில் இணைந்து கொள்வதற்கு 2024-09-02ஆம் திகதி அல்லது அதற்கு முன் நிகழ்நிலை கூட்டத்திற்கான இணைப்பை (Link) வழங்குமாறு நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளருக்கு மின்னஞ்சல் மூலம் வேண்டுகோள் ஒன்றைச் செய்தல் வேண்டும்.
10. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் கலந்து கொள்ளல், விலைமனுக்களைத் தயாரித்தல் மற்றும் கொண்டு வந்து ஒப்படைத்தலுக்காக விலைமனுதாரருக்கு ஏற்படும் எந்தவொரு செலவுகள் தொடர்பிலும் எந்தவொரு பொறுப்பும் தொழில்வழங்குநரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**திட்டப் பணிப்பாளர்,**
**திட்ட முகாமைத்துவ பணிமனை (PMU),**
**மஹாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம் (MWSIP),**
**இல. 493 1/1, T.B. ஜயா மாவத்தை,**
**கொழும்பு-10, இலங்கை.**
**தொலைபேசி இல. : +94 11 2675810/ +94 11 2675882**
**தொலைநகல் இல. : +94 11 2675227**
**மின்னஞ்சல் முகவரி : ebid.mwsip@gmail.com**

Trusted Marketplace of Classified Advertisers
Sunday Observer adz Classified
Tuition Vehicle Employment Photo Classifieds Miscellaneous House/ Land Rent or Lease Wanted
For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Maharagama - TEL : 011 2 828 114 FAX : 011 4 828 114 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### உள்ளூராட்சித் திணைக்களம், கிழக்கு மாகாணம், திருகோணமலை

### டிராக்டருடன் பொருத்தப்பட்ட 4CBM கொள்ளளவுடைய குப்பை Compactor வழங்கலின் பெறுகை

1. மூதூர் பிரதேச சபைக்கு மாகாண விசேடத்துவ அபிவிருத்தி மானியத்திலிருந்து (PSDG) நிதி ஒதுக்கீடொன்று கிடைத்துள்ளது. திண்மக் கழிவு முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்காக டிராக்டர் ஒன்றுடன் பொருத்தப்பட்ட 4CBM கொள்ளவுடைய குப்பை Compactor ஒன்றை கொள்வனவு செய்வதற்காக பிரயோகிக்க விரும்புகின்றது.
2. டிராக்டர் ஒன்றுடன் பொருத்தப்பட்ட 4CBM கொள்ளளவுடைய Compactor ஒன்றை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மூதூர் பிரதேச சபை,செயலாளரின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது அழைக்கின்றார்.
3. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பொதியின் விநியோகக் காலமானது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட நாள் முதல் இருபத்தொரு நாட்களாகும்.
4. விலைமனுக்கள் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரலின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் என்பதுடன் முதன்மை நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் மூலமான விலைக்கோரல்கள் மட்டுமே அனுமதிக்கப்படும். முதன்மை நிறுவனத்தின் விநியோகஸ்தர் மூலம் சமர்ப்பிக்கத் தவறினால் அது பதிலளிக்காத விலைமனுவாக கருதப்படும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை மூதூர் பிரதேச சபை செயலாளரிடமிருந்து தொலைபேசி இல. 026-2238376 அல்லது திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடமிருந்து தொலைபேசி இல. 026-2222427, தொலைநகல் இல. 026-2223639 பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரையான அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024 ஆகஸ்ட் 13ஆம் திகதி முதல் 2024 செப்டெம்பர் 02ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான கடமை நேரங்களில் திருகோணமலை மாவட்டம், உள்ளூ ராட்சி உதவி ஆணையாளருக்கு மீளளிக்கப்படாத 5000.00 ரூபா கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்தியமைக்காக கணக்கிடல் கிளையினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து மற்றும் பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனுக் கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
7. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024 செப்டெம்பர் 02ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன்னராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர், திருகோணமலை மாவட்டம், சென் அந்தனீஸ் வீதி, திருகோணமலை எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். திருகோணமலை, சென் அந்தனீஸ் வீதி, திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு அதன் பின் உடன் திறக்கப்படும்.
8. சகல விலைமனுக்களுடனும் பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
9. விலைமனுக்கள் 2024-11-18ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும்.
10. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024 ஆகஸ்ட் 22ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இடம்பெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தங்கள் சொந்த செலவில் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றலாம்.

| ஒப்பந்த இலக்கம் | சேவைகளின் விபரம் | விநியோகக் காலம் | தேவையான விலைக்கோரல் பிணை முறி | |
|---|---|---|---|---|
| | | | பிணை முறித் தொகை | செல்லுபடிக் காலம் |
| EP/CLG/PSDG/2024/G-01 | டிராக்டர் ஒன்றுடன் பொருத்தப்பட்ட 4CBM கொள்ளளவுடைய Compactor ஒன்றை வழங்குதல் | 21 நாட்கள் | 250,000.00 | 2024-12-16. |

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**உள்ளூராட்சித் திணைக்களம்,**
**கிழக்கு மாகாணம், திருகோணமலை.**
**2024-08-13.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### திருகோணமலை நகர சபை

1. கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்கான பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து திருகோணமலை நகர சபை சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. ஒற்றை கட்ட ஒற்றை கடித உறை முறையில், தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும். 2021.02.18 ஆம் திகதிய 04/2016 (iii) ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டவாறு இந்த பெறுகையின் கீழ் மேற்கொள்வதற்கான பணியின் மதிப்பிடப்பட்ட பெறுமதி 50 மில்லியன் ரூபாவுக்கு (வெட் மற்றும் மற்ற வரிகள் தவிர்த்து) குறைவாக இருக்கும் வரை பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை பொருந்தும்.
3. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு தேவையுடைய செல்லுபடியான CIDA பதிவை பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு தேவையான தகைமை விலைமனு ஆவணத்தின் பிரிவு 4 இல் தரப்பட்டுள்ளது.
5. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் uctrinco@gmail.com என்ற மின்னஞ்சல், 026-2220552 என்ற தொலைநகல் இலக்கம், 026-2222075 என்ற தொலைபேசி இலக்கத்தில் திருகோணமலை, டோக்யார்ட் வீதி, இல. 400, நகர சபை, செயலாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு மேலுள்ள அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் விலைமனு ஆவணங்களை பெறுவதற்கு முன்னர் கட்டணம் இன்றி அவைகளை பரீட்சிக்க முடியும்.
6. மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தியதற்கான அத்தாட்சியாக பற்றுச்சீட்டை திருகோணமலை, டோக்யார்ட் வீதி, இல. 400, நகர சபை, செயலாளரின் அலுவலகத்தில் சமர்ப்பித்து 2024.08.13 ஆம் திகதி தொடக்கம் 2024.08.27 ஆம் திகதி வரை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை திருகோணமலை, டோக்யார்ட் வீதி, இல. 400, நகர சபை, செயலாளரின் அலுவலகத்தில் எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களில் முழுமையான தொகுதி ஒன்றை இரு பிரதிகளில் வாங்கலாம்.
7. கீழ் குறிப்பிடப்பட்ட தொகைக்கான விலைமனு பிணை ஒன்றை கொண்ட விலைமனுவை 2024.08.28 ஆம் திகதி பி.ப. 3.00 அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, நகர சபை, இல. 400, டோக்யார்ட் வீதி, திருகோணமலை என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள்/ விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்ட பின் அவை உடன் திறக்கப்படும்.
8. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2024.08.21 ஆம் திகதி திருகோணமலை, டோக்யார்ட் வீதி, இல. 400, நகர சபையில் இடம்பெறும். ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் இந்தக் கூட்டத்தில் தமது சொந்த செலவில் பங்கேற்கலாம்.
9. பெறுகைக் குழுவின் முடிவு ஒப்பந்தம் வழங்குவதில் இறுதி முடிவாகும்.

| பணி விபரம் | தேவையான CIDA தரம் மற்றும் நிபுணத்துவம் | வெட் தவிர்த்து நிர்மாணச் செலவு (ரூபா) | ஒப்பந்தக் காலம் | விலைமனு செல்லுபடிக் காலம் | விலைமனு பிணை | | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | தொகை (ரூபா) | செல்லுபடி | |
| திருகோணமலை, உள்ளக துறைமுக வீதியில் முன்மொழியப்பட்ட பொழுதுபோக்கு அபிவிருத்திக்கான சூரிய சக்தி விளக்குகளை வழங்குதல் மற்றும் பொருத்துதல் | C 06 மற்றும் C 05 (கட்டடங்கள்) அல்லது EM 3 | 15.54 மில். ரூபா | 45 நாட்கள் | 77 நாட்கள் | ரூபா 160,000/ - வங்கி அல்லது காப்புறுதி பிணைமுறி/ CGF | 2024.11.30 வரை | 5,000/- |

**டீ. ஜெயவிஷ்ட்னு**
**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு**
**2024.08.13**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

கீழ்க்காணும் உபகரணங்களுக்காக தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை, கொழும்பு 08, காசல் வீதி மகளிர் மருத்துவமனையின் பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

| விலைமனு இல | வழங்கல் |
|---|---|
| FM09/Exercise ECG/2024 | Exercise ECG Monitoring System - 01 Nos |
| FM09/Ultra Sound High End/2024 | High end Ultra Sound Scanner - Color Dropper - 01 Nos |

ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக ரூபா 2500.00 செலுத்துவதன் பேரில் மற்றும் கீழ்க்காணும் ஆவணங்களைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2024.08.13 மு.ப. 09.00 முதல் பி.ப. 3.00 வரை வேலை நாட்களில், கொழும்பு 08, காசல் வீதி மகளிர் மருத்துவமனையின் கணக்காளரின் அலுவலகத்தில் இருந்து விலைமனு ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

- ♦ கொழும்பு - 08, காசல் வீதி மகளிர் மருத்துவமனை, பணிப்பாளரின் முகவரிக்கு ஓர் எழுத்துமூல விண்ணப்பம்.
- ♦ வியாபார பதிவுச் சான்றிதழ் (உறுதி செய்யப்பட்ட போட்டோ பிரதி)
- ♦ அவர்களது தயாரிப்பிற்கான உள்ளூர் முகவராக உங்களது கம்பனியினால் நியமிக்கப்பட்ட முதன்மையாளர்களால் வழங்கப்படும் ஓர் சான்றிதழ்/ கடிதம்
- ♦ இப் பெறுகைக்காக தகைமை பெறுவதற்கு ஒவ்வொரு விலைமனுவுக்கும் பொது ஒப்பந்தத்தின் 8ம் பந்தியின் கீழ் கம்பனிப் பதிவாளரால் வழங்கப்படும் கட்டணம் செலுத்துவதன் பேரிலான பதிவுச் சான்றிதழ்

அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் அல்லது இலங்கையின் உபகரணங்களின் உற்பத்தியாளர்களின் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதிகள் இக் கேள்வியில் பங்குபற்ற தகைமை பெறுவர்.

விலைமனுக்கள் 2024.09.03 மு.ப.10.00 மணிக்கு திறக்கப்படும். அத்துடன் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் சமுகமளிக்க அனுமதிக்கப்படுவர்.

விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்க முடியும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கணக்காளரிடமிருந்து தொ.பே. 0112679731 ஊடாக மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**காசல் வீதி மகளிர் மருத்துவமனை,**
**கொழும்பு - 08**

**Repeat Your ad For Better Offers**

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the

Daily News

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், கிழக்கு மாகாணம்

### நேரடி அமைச்சு வேலைகள் - 2024

1. 01ஆம் அட்டவணையிலுள்ள வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கிழக்கு மாகாண, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் சார்பாக, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| தொ. இல. | அடையாள இல. | விளக்கம் | விலை மனுதாரருக்குரிய தேவைப்படும் தரம் | TEC பொறியியலாளரின் மதிப்பீடு (மில். ரூபாவில்) | விலை மனுப் பிணை முறி (ரூபாவில்) | விலைமனு செல்லுபடிக் காலம் | விலைமனு பிணை முறியின் செல்லுபடிக் காலம் | பூர்த்தி செய்யப்பட வேண்டிய காலப்பகுதி (நாட்காட்டி நாட்கள்) | நிதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | EP/PDHS/ENG/L.MI/PD/2024-03 | மூதூர் ஆதார வைத்தியசாலையில் தற்போதுள்ள OPD கட்டிடத்தை புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்துதல் | C6 மற்றும் C5 | 13.6 | 137,000.0 | 77 | 91 | 60 | Line Ministry |
| 02 | EP/PDHS/ENG/L.MI/PD/2024-04 | கிண்ணியா ஆதார வைத்தியசாலை சிகிச்சையக கட்டிடத்தை பகுதியளவில் நிறைவு செய்தல் | C6 மற்றும் C5 | 13.6 | 137,000.0 | 77 | 91 | 60 | Line Ministry |

அட்டவணை - 01

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும். இந்த பெறுகையின் கீழ் நிறைவேற்றப்படவுள்ள வேலையின் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பெறுமதியானது (பெசேவ மற்றும் ஏனைய வரிகள் நீங்கலாக) 50 மில். ரூபாவிற்கு குறைவாகவிருப்பதனால், பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமையானது 04/2016(iv) என்ற இலக்கத்தையுடைய அரச நிதி சுற்றறிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு பிரயோகப்படுத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் ICTAD (தற்போது CIDA) இன் 1ஆம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு கட்டிட நிருமாணத்தின் தேவைப்படும் தரத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்கான தகைமைத் தேவைப்பாடுகள் பின்வரும் தகவுத்திறனை கொண்டிருத்தல் வேண்டும்.
   - அ) ஏனைய ஒப்பந்தரீதியிலான கடப்பாடுகளின் தேறிய ஆகக் குறைந்த திரவச் சொத்துக்கள் மற்றும் / அல்லது கடன் வசதிகள் (POD) மற்றும் ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள எந்தவொரு முற்பணக்கொடுப்பனவுகள் நீங்கலானது கேள்வியிடக்கூடிய தொகையின் 30% இற்கு குறைவாகவிருத்தல் ஆகாது. விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து ஆகக் குறைந்தது 03 மாதங்களுக்கு முன்னராக வங்கியொன்றிலிருந்து பெறப்பட்ட சான்று பகரும் ஆவணமானது தொழில் வழங்குநருக்கு நேரடியாக முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டும்.
   - ஆ) பணிநிலை அலுவலர்களாக 01 எண்ணிக்கையான NDT (சிவில்) தகைமையையுடைய தொழில்நுட்ப அலுவலர் அல்லது நிகரான 3 வருட அனுபவத்தையுடைய அல்லது 5 வருட அனுபவத்தையுடைய NCT அலுவலராகவிருத்தல் வேண்டும். (முழு நேர அடிப்படையில்)
   - இ) விலைமனுதாரர் கடந்த மூன்று ஆண்டுகளில் குறைந்தபட்சம் கேள்வியிடக்கூடிய தொகைக்கு இதனையொத்த கட்டிடத்தை நிர்மாணிப்பதில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் CIDA பதிவுப் புத்தகத்தின் சான்றிதழ் சகிதம் வேலை வழங்குநரிடமிருந்து / ஒப்புதல் அறிக்கையை ஆதார ஆவணமாக இணைத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்கள் மற்றும் இலவச விலைமனுக் கோரல் பரீட்சித்தல் என்பவற்றை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையும் திருகோணமலை மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் மேற்கொள்ளலாம்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024-08-13ஆம் திகதியிலிருந்து 2024.09.03 திகதியன்று வரையும் அலுவலக நேரங்களில் பி.ப. 3.00 மணி வரையும் 6,000.00 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், திருகோணமலை, நீதிமன்ற வீதி, 120ஆம் இலக்கத்திலுள்ள மாகாண சுகாதார சேவைகள் (கிமா) மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
7. சகல விலைமனுக்களுடனும் மேற்கூறிய திகதியன்று வரையும் (01ஆம் அட்டவணை) செல்லுபடியாகும் தன்மையிலும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் புகழ்வாய்ந்த வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டதும் 01ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான தொகைக்குமாக கிழக்கு மாகாண, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பெயரில் வழங்கப்பட்டதுமான விலைமனுப்பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது "நிபந்தனையற்ற கோரும்போது பெற்றுக் கொள்ளும் உத்தரவாதமாகவும்" இருப்பதுடன் விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் வழங்கப்பட்டுள்ள உருமாதிரியிலும் அமைந்திருத்தல் வேண்டும்.
8. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தலைவர், பெறுகைக் குழு என முகவரியிடப்பட்டு இரு பிரதிகளில் திருகோணமலை, நீதிமன்ற வீதி, 120 ஆம் இலக்கத்திலுள்ள கிழக்கு மாகாண, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.
9. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியானது 2024.09.03ஆம் திகதியன்று மு.ப. 10.00 மணியாகுமென்பதுடன் கிழக்கு மாகாணம், மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், பொறியியல் பிரிவில் 2024-07-23ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்குத் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
10. விலைமனுக்களை திறக்கும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளித்திருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
11. திருகோணமலை கிழக்கு மாகாண, மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் 2024-08-28ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.
12. கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் திருப்தியற்ற செயற்பாட்டை மேற்கொண்ட அல்லது பிழையான தகவலை சமர்ப்பித்த விலைமனுதாரர்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டு செயற்பாட்டின் போது நிராகரிக்கப்படுவார்கள்.
13. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதும் முடிவானதுமாகும். திணைக்கள பெறுகைக் குழுவானது அதனது சொந்த தீர்மானத்தின் பெயரில் எந்தவொரு தனியான அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

**வைத்தியர் D.G.M. கொஸ்தா,**
**மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்,**
**மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்,**
**கிழக்கு மாகாணம்,**
**திருகோணமலை.**

# கேள்விக்கான அழைப்பு

மத்துகம வலய கல்வி அலுவலகத்தில் பெறுகைக் குழுவின் தலைவரால் மத்துகம வலயக் கல்விப் பணிமனைக்கு சொந்தமான பாடசாலைகளுக்கு மற்றும் மத்துகம வலய கல்விப் பணிமனைக்குத் தேவையான கீழ்க்காணும் உருப்படிகளை 2024ம் ஆண்டின் எதிர்வரும் காலத்திற்காக கொள்வனவு செய்வதற்காக 2024.09.04 மு.ப. 10.00 வரை தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விக்காக இத்தால் அழைக்கப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | உருப்படி | மீளளிக்கப்படாத தொகை (ரூ) | மீளளிக்கப்படும் தொகை (ரூ) | கேள்வி ஆவணம் விநியோகிக்கப்படும் இடம் மற்றும் தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|
| P1 | ஸ்மார்ட் போட், ஸ்மார்ட் போட் தாங்கி, U.P.S. ஸ்மார்ட் போட் இற்கு, லெப்டொப் கணனி, டெஸ்க்டொப் கணனி, U.P.S (டெஸ்க்டொப் கணனிக்காக) கலர்பிரின்டர் லேசர் பிரின்டர், வைபை ரவுட்டர்ஸ், டெப்கணனி | 1000.00 | 25000.00 | வலயக் கல்விப் பணிமனை, மத்துகம 0342247218 |
| P2 | Wi - Fi router Multimedia Speaker (Party box), Bluetooth Speaker, Mirrorless Camera with dry cabinet, Tripod Camera Stand, Podium | 1000.00 | 10000.00 | - அவ்வாறே - |

* ஒவ்வொரு உருப்படிக்கும் வேறுவேறாக விலைமனுக்களை சமர்ப்பிக்க வேண்டியதுடன், ஒரு உருப்படிக்கு மட்டும் விலைமனுக்களை சமர்ப்பிக்கலாம்.

* கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக்கும் அளவு 2024ம் ஆண்டில் எதிர்வரும் காலத்திற்காக தேவைப்பாட்டின் அடிப்படையில் மாற்றமடையலாம்.

01. கேள்விக்கோரல் தேசிய போட்டி கேள்விக்கோரல் முறைமையின் பிரகாரம் இடம்பெறும்.

02. மேற்படி கேள்விக்காக ஆர்வம் காட்டுகின்ற தகைமையுடனான கேள்விதாரர்கள் 2024.08.13 முதல் 2024.09.03 வரை அலுவலக நாட்களில் மத்துகம வலயக் கல்விப் பணிமனையில் இருந்து மு.ப. 09.00 முதல் பி.ப. 2.30 வரை அலுவலக நேரங்களில் கேள்விக்கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

03. ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு, மத்துகம வலயக்கல்விப் பணிப்பாளருக்கு எழுத்து மூல வேண்டுதலைச் சமர்ப்பித்து, ஒவ்வொரு வகுதிக்கும் வேறுவேறாக மீளளிக்கப்படாத கட்டணத்தை மத்துகம வலயக் கல்விப் பணிமனையின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை நிர்வாகப் பிரிவிற்கு சமர்ப்பித்த பின்னர் 2024.08.13 முதல் 2024.09.03 வரை கேள்வி ஆவணங்களை இவ் அலுவலகத்தில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை பெற்றுக் கொள்ளலாம்.

04. பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்கள் 2024 செப்டெம்பர் 04 முதல் மு.ப. 10.00 இற்கு முன்பு, மத்துகம வலயக் கல்விப் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது மத்துகம வலய கல்விப் பணிமனைக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் 2024.09.04 மு.ப. 10.00 இற்கு நேரடியாக விஜயம் செய்து சமுகமளிக்கும் கேள்விதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.

05. சகல கேள்வியுடனும் கேள்விப் பிணை சார்பாக கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்படும் விதத்தில் மீளளிக்கப்படும் வைப்புத் தொகையைச் செலுத்தியபின்பு, அதற்காக விநியோகிக்கப்பட்ட பற்றுச் சீட்டின் உறுதிசெய்த பிரதியொன்றை இணைத்தல் வேண்டும்.

**டபிள்யூ.ஏ.பீ. விஜேதுங்க,**
**தலைவர், பெறுகைக் குழு,**
**மத்துகம வலய கல்விப் பணிமனை,**
**மத்துகம.**
2024 ஓகஸ்ட் 13ம் திகதி

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## மாகாண கல்வித் திணைக்களம், கிழக்கு மாகாணம்

1. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலமாக பின்வரும் வேலைகளை நிறைவேற்றுவதற்காக தகைமையுள்ள நிர்மாண ஒப்பந்தக்காரர்களிடமிருந்து திருகோணமலை கிழக்கு மாகாண, மாகாண கல்வித் திணைக்களத்தின் மாகாண கல்விப் பணிப்பாளரினால் விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

| இல. | குறியீட்டு இல. | விளக்கம் | கட்டுமான வகுதியில் விலைமனுதாரருக்கு தேவைப்படும் CIDA தரம் | கேள்விப் பிணை (ரூபாவில்) | பொறியியலாளரின் மதிப்பீடு (மில்.ரூபாவில்) | பூர்த்தி செய்ய வேண்டிய காலப்பகுதி (நாட்காட்டி நாட்கள்) | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூபாவில்) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | EP/GEM/ 2024/ W/01 | T/T மாதுமை அம்மன் வித்தியாலயத்தில் வகுப்பறை கட்டிடத்துடனான 15.00மீ x9.60மீ அளவுள்ள இரு மாடி கணித ஆய்வுகூட கட்டுமானம். | சி-6 அல்லது சி-5 | 202,000.00 | 20.151 | 100 நாட்கள் | 7,500.00 |
| 2. | EP/GEM/ 2024/ W/02 | T/Tn கோமரங்கடவல மஹா வித்தியாலயத்தில் வகுப்பறை கட்டிடத்துடனான 15.00மீ x9.60மீ அளவுள்ள இரு மாடி கணித ஆய்வுகூட கட்டுமானம். | சி-6 அல்லது சி-5 | 215,000.00 | 21.449 | 100 நாட்கள் | 7,500.00 |
| 3. | EP/GEM/ 2024/ W/03 | Bt/Bc/ ஏறாவூர் அல் அசார் பெண்கள் உயர் பாடசாலையில் வகுப்பறை கட்டிடத்துடனான 15.50மீ x9.60மீ அளவுள்ள இரு மாடி கணித ஆய்வுகூட கட்டுமானம். | சி-6 அல்லது சி-5 | 205,000.00 | 20.401 | 100 நாட்கள் | 7,500.00 |
| 4. | EP/GEM/ 2024/ W/04 | Am/Am அம்பாறை, ஹாகொட ஸ்ரீ இந்திரசார வித்தியாலயத்தில் 15.00மீ x9.50மீ அளவுள்ள இரு மாடி கணித ஆய்வுகூட கட்டுமானம். | சி-6 அல்லது சி-5 | 221,000.00 | 22.008 | 100 நாட்கள் | 7,500.00 |
| 5. | EP/GEM/ 2024/ W/05 | Km/Km/ கல்முனை அல்-அசார் வித்தியாலயத்தில் 15.00மீ x9.00மீ அளவுள்ள இரு மாடி கணித ஆய்வுகூட கட்டுமானம். | சி-6 அல்லது சி-5 | 218,000.00 | 21.725 | 100 நாட்கள் | 7,500.00 |
| 6. | EP/GEM/ 2024/ W/06 | Am/Am/Tk திருக்கோவில் M.M.T. வித்தியாலயத்தில் 15.00மீ x9.50மீ அளவுள்ள இரு மாடி கணித ஆய்வுகூட கட்டுமானம். | சி-6 அல்லது சி-5 | 219,000.00 | 21.841 | 100 நாட்கள் | 7,500.00 |

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும். இந்த பெறுகையின் கீழ் (பெசேவ மற்றும் ஏனைய வரிகள் நீங்கலாக) நிறைவேற்றப்படவுள்ள வேலையின் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பெறுமதியானது 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாகவிருப்பதனால், பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை ஆகியன 04/2016 (iii) என்ற இலக்கமுடைய அரச நிதி சுற்றறிக்கையில் நிர்ணயிக்கப்பட்டவாறு பிரயோகப்படுத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக,சித்திகரமான விலைமனுதாரர் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் கட்டிடத்தில் (ICTAD /CIDA) பதிவில் விஷேடத்துவ துறையில் கட்டிடத்திற்கான அட்டவணையில் விதித்துரைக்கப்பட்ட தரத்தின் கீழ் ஒப்பந்தக்காரர்கள் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கிழக்கு மாகாண, திருகோணமலை கல்வி அமைச்சு, பாடசாலைகள் வேலைகள் பணிப்பாளரிடமிருந்து பெற்று திருகோணமலை கல்வி அமைச்சில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. ஒப்பந்தத்தை கையளிக்கப்படுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகள்.

| தொழில்நுட்ப தேவைப்படுத்தல்கள் | நிதியிடல் தேவைப்படுத்தல்கள் | சட்டரீதியிலான தேவைப்படுத்தல்கள் |
|---|---|---|
| தகைமை மற்றும் அனுபவத்துடான ஆகக்குறைந்த நபர்கள்<br>01. தொழில்நுட்ப அலுவலர்-01<br>தகைமை: NDT (சிவில்) அல்லது நிகரான<br>அனுபவம்: 3 வருடங்கள்<br>அல்லது<br>தகைமை: NCT அல்லது நிகரான<br>அனுபவம்: 5 வருடங்கள்<br>02. வேலை மேற்பார்வையாளர்-01<br>தகைமை: NCT அல்லது நிகரான<br>அனுபவம்: 3 வருடங்கள் | * மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியிலிருந்து விலைமனு தொகையின் 20% இற்கான கடன் வசதியை விலைமனுதாரர் சமர்ப்பித்தல் வேண்டும்.<br>* கடந்த 3 வருடங்களில் நிறைவேற்றப்பட்ட நிமாண வேலையின் வருடாந்த சராசரி பெறுமதியானது விலைமனுத் தொகையின் ஆகக்குறைந்தது 60% இற்கு சமமாகவிருத்தல் வேண்டும்.<br>* கடந்த 3 வருடங்களில் நிகரான தன்மையில் ஆகக்குறைந்தது விலைமனுத் தொகையின் 50% இற்கு குறையாத ஒரு ஒப்பந்தத்தையாவது விலைமனுதாரர் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். | * விலைமனுதாரர் பதிவுசெய்யப்பட்ட சட்ட நிலபரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். (ஏகஉரிமையாளர், பங்குடமை, கம்பனி போன்றவை)<br>* அரசநிதித் திணைக்களம் அல்லது வேறேதாவது முகவராண்மையினால் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலிலிடப்பட்ட/ தவறிழைத்த ஒப்பந்தக்காரரென விலைமனுதாரர்கள் பிரகடணப்படுத்தியிருத்தல் ஆகாது |

6. 2024.08.13 ஆம் திகதியிலிருந்து 2024.09.02 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், கிழக்கு மாகாண திருகோணமலை, மாகாண கல்வித் திணைக்களத்திற்கு, எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம்,ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்று இரு பிரதிகளில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்தில் கிழக்கு மாகாண,மாகாண கல்வித் திணைக்கள கணக்கிடல் கிளையில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
7. விலைமனுக்கள் தனித்தனியான உறைகளில் இரு பிரதிகளில் 2024.09.03 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியான திருகோணமலை உவர்மலை, கிழக்கு மாகாணம், மாகாண கல்வித் திணைக்களம் என்பதில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவைகளை மூடியபின்னர் விரைவாகவே திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான முடிவுறுத்தல் திகதியிலிருந்து 77 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. அனைத்து விலைமனுக்களும் ஒன்றில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட புகழ் வாய்ந்த வங்கியொன்றிலிருந்து அல்லது நிர்மாண உத்தரவாத நிதியத்திலிருந்து பெறப்பட்ட பிணைமுறியொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். பிணைமுறியானது 2024.09.03 ஆம் திகதியிலிருந்து 105 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
10. திருகோணமலை, கிழக்கு மாகாணம், மாகாண கல்வித் திணைக்களத்தில் 2024.08.21 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமானது நடத்தப்படும்.
11. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதும் முடிவானதாகும். திணைக்கள பெறுகைக் குழுவானது எந்தவொரு தனியான அல்லது அனைத்து விலைமனுக்களையும் அதனது சுயதீர்மானத்தில் நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளது.

**எஸ். குலேந்திரகுமார்,**
**தலைவர்/மாகாணப் பணிப்பாளர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண கல்வித் திணைக்களம், கி.மா.**
**திகதி: 12.08.2024.**

# இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 21 (2) பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.

## விலக்களித்தலுக்கான உத்தேசம்

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 21 (2) (திருத்தப்பட்ட) பிரிவிற்கமைய இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவானது இத்தால் அறியச்செய்வது யாதெனில், சக்தி விநியோக அளவுக் குறைவு மற்றும் அவற்றின் வளாகங்களுள் ஓர் எல்லைக்குட்பட்ட விநியோக வலையமைப்பு காணப்படுதல் ஆகியவற்றால், குறித்துரைக்கப்பட்ட/ முறையான வளாகங்களில் மட்டும் மின்சாரத்தை விநியோகித்தல் மற்றும் வழங்கல் ஆகிய நோக்கங்களிற்காக, ஆணைக்குழு கீழ்வரும் அடையாளங்காணப்பட்ட விண்ணப்பதாரருக்கு விலக்களிக்க உத்தேசித்து உள்ளது என்பதாகும்.

| விண்ணப்ப இல | விண்ணப்பதாரர் | வளாகம் | நுகர்வோரின் இயல்பு |
|---|---|---|---|
| E/AE/N/24/04 | ஹேவா கோபராகே மேர்வின் சில்வா | 296/5, பார்க் வீதி, கொழும்பு 05 | குடியிருப்பு |

மேற்குறிப்பிட்ட முன்மொழிவுகள் தொடர்பான, ஆட்சேபனைகள் (ஏதுமிருப்பின்) அறிவித்தல் வெளியிடப்பட்டு இருபத்து எட்டு (28) நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக அறிவிக்கலாம். அத்துடன் ஆட்சேபனைகளை முன்வைக்கும் போது விண்ணப்ப இலக்கத்தினைக் குறிப்பிட்டு முன்வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தலைவர்
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
06-வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இலக்கம் 28, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03

திகதி: 2024.08.13

தொலைபேசி: (011) 2392607/8
தொலைநகல்: (011) 2392641
பெக்ஸ்: licensing@pucsl.gov.lk
இணையதளம்: www.pucsl.gov.lk

Replies to Classifieds & Casual Advertisements published C/o the

Daily News

should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

# இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12 (1) (அ) பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.

## அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான உத்தேசம்

2009ம் ஆண்டு 20ம் (திருத்தப்பட்ட) இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12(1) (அ) பிரிவிற்கமைய, இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு ("ஆணைக்குழு") நுகர்வோர்களுக்கு தொடர்ச்சியாக மின்சார விநியோகத்தைக் கிடைக்கச் செய்வதை உறுதிசெய்யும் பொருட்டு குறிப்பிட்ட நபர்களுக்கு மின்சாரத்தினை பிறப்பாக்கம் செய்யும் நோக்கத்திற்கான அனுமதிப் பத்திரத்தினை மேம்படுத்த உத்தேசிக்கின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றது.

| விண்ணப்ப குறிப்பு இல. | விண்ணப்பதாரர் | மின்நிலையம்/ வசதியின் பெயர் | திறன் (MW) | தொழினுட்பம் |
|---|---|---|---|---|
| E/AL/N/24/08 | ஹிரான் பவர் (பிரைவேட்) லிமிடெட் | அமனாவல மினி ஹைட்ரோ திட்டம் | 1 | மினி ஹைட்ரோ |
| E/AL/N/24/09 | WKV ஹைட்ரோ டெக்னிக்ஸ் (பிரைவேட்) லிமிடெட் | பஹத ஓயா மினி நீர் மின் நிலையம் | 1.5 | மினி ஹைட்ரோ |

மேற்குறிப்பிட்ட முன்மொழிவுகள் தொடர்பான, ஆட்சேபனைகள் (ஏதுமிருப்பின்) அறிவித்தல் வெளியிடப்பட்டு இருபத்து எட்டு (28) நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக அறிவிக்கலாம். அத்துடன் ஆட்சேபனைகளை முன்வைக்கும்போது விண்ணப்பக் குறிப்பு இலக்கத்தினைக் குறிப்பிட்டு முன்வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தலைவர்
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
06-வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இலக்கம் 28, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03

திகதி: 2024.08.13

தொலைபேசி: (011) 2392607/8
தொலைநகல்: (011) 2392641
பெக்ஸ்: licensing@pucsl.gov.lk
இணையதளம்: www.pucsl.gov.lk

# ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

## பூங்கா பராமரிப்பு சேவை வழங்குதல் - 2024/2026

## கேள்விகோரல்

01. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் சேவைகளுக்காக தகுதி மற்றும் தகைமையுடைய சேவை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மதிப்பீட்டுச் செலவு (ரூ.மில்) | மீளளிக்கப் படாத வைப்புத் தொகை | கேள்விப் பிணையின் பெறுமதி மற்றும் செல்லுபடியாக வேண்டிய நாட்கள் (ரு) | கேள்வி செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | பூங்காப் பராமரிப்பு சேவை வழங்குதல் A வலயம் USJP/EIS/LS/ZA/2024-2026 A வலயத்திற்கான கேள்வி வைப்பதற்கு தகைமை பெறுவது தரை அலங்காரத்திற்கான CIDA பதிவு உள்ள கேள்விதாரர் மட்டுமே | 38 | 8500.00 | 380,500.00 - 2025.01.03 | 2024.12.05 |
| 02 | பூங்கா பராமரிப்பு சேவை வழங்குதல் வலயம் B USJP/EIS/LS/ZB/2024-2026 A | 3.7 | 1500.00 | 37,500.00 - 2024.12.20 | 2024.11.21 |

ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு ஒரு வலயம் அல்லது இரு வலயங்களுக்கும் கேள்விகளைச் சமர்ப்பிக்கலாம் கேள்வி மதிப்பீடு ஒவ்வொரு வலயத்திற்கும் வேறுவேறாக இடம்பெறும்.

02. உத்தேச சேவைக் காலம் 2 வருடங்களாகும் (365X2). இரண்டு வருட காலத்திற்கு புதுப்பித்தலுக்கு உட்பட்டு முதலாம் வருட காலத்திற்காக ஆரம்பத்தில் ஒப்பந்தம் வழங்கப்படும் சேவை வழங்குநரின் வேலை செயற்பாட்டை கவனத்தில்கொண்டு இரண்டாம் வருடத்திற்கு புதுப்பித்தல் தீர்மாணிக்கப்படும். சேவை வழங்குநரின் வேண்டுதலின் பிரகாரம் இரண்டாம் வருடத்திற்காக ஒப்பந்தப் பெறுமதி 5% - 10% அளவில் அதிகரிக்கப்படும். நிலையான அதிகரித்தல் விகிதாசாரம் சந்தை விலைமனுவைக் கவனத்தில் கொண்டு திணைக்களக் பெறுகைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

03. இப்பெறுகை தேசிய போட்டி விலைமனுக்கோரல் பிரகாரம் இடம்பெறும்.

04. இதுபற்றி ஆர்வம் காட்டுகின்ற தகுதியான சேவை வழங்குநர்களுக்கு தொ.பே. இல. 0112802856 ஊடாக சிரேஷ்ட உதவியாளர் / நிறுவனங்கள் (தகவல் மற்றும் சேவை)ஐ அழைத்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் 2024 ஓகஸ்ட் 13 ஆம் திகதி முதல் 2024 செப்டெம்பர் 03ம் திகதி வரை வாரத்தின் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 4.15 வரை கீழ்க்காணும் முகவரியில் கேள்வி பத்திரங்களை பரீட்சித்துப் பார்க்களாம்.

05. இதுபற்றி ஆர்வம் காட்டுகின்ற தகைமையான சேவை வழங்குநர்களுக்கு 2024 ஓகஸ்ட் 13 முதல் 2024 செப்டெம்பர் 03 வரையான காலத்திற்குள் கீழ்க்காணும் முகவரிக்கு எழுத்துமூலம் விண்ணப்பித்து மற்றும் மேற் குறிப்பிட்டவாறு மீளளிக்கப்படாத வைத்துத்தொகைச் செலுத்தி குறித்த கேள்விப் பத்திரங்களை (ஆங்கில மொழியில்) பெற்றுக்கொள்ளலாம். மேற்படி வைப்புத் தொகையைச் செலுத்த முடிவது வாரத்தின் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை பல்கலைக்கழகத்தின் காசாளர் கருமபீடத்திற்கு காசாக மட்டுமே.

06. பெறுகைக்கு முன்னரான தெளிவு படுத்தல் கூட்டம் 2024 ஓகஸ்ட் 23 மு.ப. 11.00 இற்கு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நிர்வாக கட்டிடத்தில் அமைந்துள்ள ஊழியர் குழாம் கூட்ட மண்டபத்தில் நடைபெறும்.

07. நிர்வாகக் கட்டிடத்தின் ஊழியர் குழாம் கூட்ட மண்டபத்தில், 2024 செப்டம்பர் 04 பி.ப. 2.30 இற்கு பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவுறுத்தப்படும். கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படும். கேள்விதார்களுக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு (ஒரு கேள்விதாரருக்கு ஒரு பிரதிநிதி வீதம்) கேள்விகள் திறக்கப்படும் வேளையில் சமுகமளிக்கலாம்.

08. கேள்விகள் உள்ளிடும் கடித உறையின் இடது மேல் மூலையில் கேள்வியின் பெயர் மற்றும் கேள்வி திறக்கப்படும் தினம் மற்றும் நேரத்தை குறிப்பிடுதல் வேண்டும். பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள், 2024 செப்டம்பர் 04ம் திகதி பி.ப. 2.30 இற்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு நுகேகொடை, கங்கொடவிலவில் அமைந்துள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவி பதிவாளர் / நிறுவனங்கள் (தகவல் மற்றும் சேவை) இற்கு பதிவுத்தபாலில் சமர்ப்பித்தல் அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்பு செய்தல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்பட்டு அவை திறக்கப்படாமலேயே மீண்டும் கேள்விதாரர்களுக்கு அனுப்பப்படும்.

09. திணைக்கள பெறுகைக் குழுவினால் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

10. மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ள குறித்த கேள்விகள் செல்லுபடியாகும் தினம் வரை செல்லுபடியாதல் வேண்டும்.

11. மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் பெறுமதியில் மற்றும் செல்லுபடியாகும் காலத்தில், இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்த வர்த்தக வங்கியிலிருந்து ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உப பீடாதிபதியின் பெயருக்கு பெற்றுக்கொண்ட கேள்விப் பிணையொன்றை சகல கேள்விப் பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

**மேலே குறிப்பிடப்படும் விடயங்களுக்கான குறித்த முகவரிகள் கீழ்க்காணுமாறு அமையும்.**

கேள்விப் பத்திரங்களைப் பரீட்சித்தல் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல், பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களை ஒப்படைத்தல்.

**சிரேஷ்ட உதவி பதிவாளர்**
**நிறுவனங்கள் (தகவல் மற்றும் சேவைகள்)**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்**
**கங்கொடவில, நுகேகொடை**

**கேள்விப் பத்திரங்களைத் திறத்தல்**
நிர்வாகக் கட்டிடத்தின் ஊழியர் குழாம் கூட்ட மண்டபம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
கங்கொடவில, நுகேகொடை

**தலைவர் / பெறுகைக் குழு**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்**
**கங்கொடவில, நுகேகொடை**
**2024.08.12**

# கிழக்கு மாகாண ரக்பியில் மின்ஹாஜ் வித்தி. வெற்றி



**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**

கிழக்கு மாகாண பாடசாலை மட்ட றக்பி போட்டியில் பாலமுனை மின்ஹாஜ் மஹா வித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

சம்மாந்துறை தேசிய பாடசாலை மைதானத்தில் நேற்று முன்தினம் (11) நடைபெற்ற கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான றக்பி போட்டியில் பாலமுனை மின்ஹாஜ் தேசிய பாடசாலை அணி இறுதிப் போட்டியில் மட்டக்களப்பு ஜோசப் பாடசாலை அணியை 35–00 என்ற புள்ளி கணக்கில் வெற்றி பெற்று முதல் தடவையாக சம்பியனாக தெரிவானது.



# ஹர்ஷிதாவின் அதிரடியால் இலங்கைக்கு இலகு வெற்றி

அயர்லாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும்இலங்கைமகளிர்அணி அயர்லாந்துக்கு எதிரான முதலாவது டி20 போட்டியில் 7 விக்கெட்டுகளால் இலகு வெற்றியீட்டி இரண்டாவது போட்டிகளைக் கொண்ட தொடரில் 1–0 என முன்னிலை பெற்றது.

டப்லினில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட அயர்லாந்து அணி 20 ஓவர்களுக்கும் 6 விக்கெட்டுகளை இழந்து 145 ஓட்டங்களை பெற்றது. ஆரம்ப வீராங்கனை கப்பி லுவிஸ் அதிகபட்சமாக 33 பந்துகளில் 39 ஓட்டங்களை பெற்றார்.

இந்நிலையில் பதிலெடுத்தாட வந்த இலங்கை மகளிர் அணிக்கு ஆரம்ப வீராங்கனை ஹர்ஷிதா சமரவிக்ரம அபாரமாக செயற்பட்டார். அவர் 45 பந்துகளில் 15 பௌண்டரிகள் மற்றும் 1 சிக்ஸருடன் ஆட்டமிழக்காது 86 ஓட்டங்களை விளாசினார்.

இதன்மூலம் இலங்கை மகளிர் 16.4 ஓவர்களிலேயே 3 விக்கெட்டுகளை இழந்து 149 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது.

இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது மற்றும் கடைசி டி20 போட்டி இன்று (13) நடைபெறவுள்ளது.

# சமரிக்கு மீண்டும் ஐ.சி.சி. கௌரவம்



இந்த ஆண்டில் இரண்டாவது முறையாக ஜூலை மாதத்தின் சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் சிறந்த வீராங்கனையாக இலங்கை மகளிர் அணித் தலைவி சமரி அத்தபத்து தெரிவாகியுள்ளார். அவர் கடந்த மே மாதத்திலும் இந்த கௌரவத்தை பெற்றிருந்தார்.

இதன்போது அவர் இந்திய நட்சத்திர ஆரம்ப வீராங்கனை ஸ்மிரிதி மன்தனா மற்றும் ஷபாலி வர்மா ஆகியோரை பின்தள்ளியே இந்த விருதை வென்றுள்ளார்.

கடந்த ஜூலை மாதத்தில் சமரி தலைமையிலான இலங்கை அணி ஏழு முறை சம்பியனான இந்தியாவை வீழ்த்தி முதல் முறையாக மகளிர் ஆசிய கிண்ணத்தை வென்றதோடு அவர் தனிப்பட்ட முறையிலும் சோபித்திருந்தார்.

34 வயதான சமரி அத்தபத்து ஐ.சி.சியின் மாதத்தின் சிறந்த வீராங்கனைக்கான கௌரவத்தை பெறுவது இது மூன்றாவது முறையாகும். இதன் மூலம் மகளிர் கிரிக்கெட்டில் அதிகபட்சமாக இந்த கௌரவத்தை பெறும் வீராங்கனை வரிசையில் மேற்கிந்திய தீவுகளின் ஹெய்லி மத்தியூஸுடன் அவர் இரண்டாவது இடத்தை பகிர்ந்துகொண்டுள்ளார். இந்த வரிசையில் அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே கார்ட்னர் (4 முறை) முதலிடத்தில் உள்ளார்.

சமரி தலைமையில் இலங்கை மகளிர் அணி கடந்த 12 மாதங்களில் சிறப்பாக செயற்பட்டு வருவதோடு இந்தக் காலப்பகுதியில் இங்கிலாந்து மற்றும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான டி20 தொடர்களில் இலங்கை முதல் முறை வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது.

# கலம்போ சிட்டி கிண்ணம் றினோன் வசம்

**வடகொழும்பு தினகரன் நிருபர்**

கலம்போ சிட்டி சவால் கிண்ணத்திற்கான இறுதிப்போட்டியில் நியூஸ்டார் அணியை 2–1 என்ற கோல் கணக்கில் வீழ்த்திய றினோன் கழகம் கிண்ணத்தை சுவீகரித்தது.

கொழும்பு கொல்ப் பந்தாட்ட லீக்கின் 112 வருட நிறைவையொட்டி சிட்டிலீக் மைதானத்தில் கடந்த சனிக்கிழமை (10) இந்த போட்டி நடைபெற்றது. ஆரம்பம் முதல் இரு அணிகளின் வீரர்களும் கோல்களை போட முயன்ற போதும் றினோன் அணியின் வீரர் கவிந்து இசான் 15ஆவது நிமிடத்தில் தனது அணிக்கான முதலாவது கோலை பெற்றார்.

27ஆவது நிமிடத்தில் றினோன் அணி வீரர் எம்.என்.எம். பஸால் இரண்டாவது கோலை புகுத்தினார். இந்நிலையில் நியூஸ்டார் அணியின் வீரர் மொஹமட் அனால் 90ஆவது நிமிடத்தில் கோல் ஒன்றை பெற்றபோதும் அது நியூஸ்டார் அணிக்கு ஆறுதல் கோலாகவே அமைந்தது.

இந்தப் போட்டியில் வெற்றியீட்டிய றினோன் அணி பத்து இலட்சம் ரூபா பணப் பரிசு, வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றியது.



## ரஷ்யாவுக்குள் உக்ரைனிய படை தொடர்ந்து முன்னேற்றம்



ரஷ்யாவுக்குள் உக்ரைனிய படை எதிர்பாராத வகையில் கடந்த ஒரு வாரமாக தாக்குதல்களை நடத்தி வரும் நிலையில் ரஷ்யா தனது இரண்டாவது எல்லை பிராந்தியத்தில் இருந்தும் மக்களை வெளியேற்றியுள்ளது.

எல்லைக்கு அருகில் எதிரிகளின் செயற்பாடுகள் காரணமாக பல்கொரோட் பிராந்தியத்தில் இருந்து சுமார் 11,000 பேர் அப்புறப்படுத்தப்படுவதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை உக்ரைனிய துருப்பு எல்லை தாண்டி தாக்குதலை நடத்திய குர்ஸ்ப் பகுதிக்கு அருகிலேயே இந்த பல்கொரோட் பிராந்தியம் உள்ளது. அது தொடக்கம் உக்ரைனியப் படை ரஷ்யாவுக்குள் சுமார் 30 கிலோமீற்றர்கள் முன்னேறியுள்ளது. இந்தப் படை நடவடிக்கையில் ஆயிரக்கணக்கான துருப்புகள் ஈடுபட்டிருப்பதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

பல்கொரோட்டின் பிராந்தியத்தில் உள்ள குடியிருப்பாளர்களுக்கு நேற்று விடுக்கப்பட்ட அறிவிப்பில் மக்களை அச்சமடைய வேண்டாம் என்றும் அங்கிருந்து வெளியேறும்படியும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஒட்டுமொத்த பிராந்தியமும் ஏவுகணை அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாக அந்தப் பிராந்திய ஆளுநர் வியாசஸ்லாவ் கிளாட்கோவ் தெரிவித்துள்ளார்.

போரை ஆக்கிரமிப்பாளர் பகுதிக்கு இட்டுச் சென்றிருப்பதாக உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமர் செலன்ஸ் கடந்த வார இறுதியில் குறிப்பிட்டிருந்தார். இந்தத் தாக்குதல் ஆத்திரமூட்டும் செயல் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் எச்சரித்துள்ளார்.

இதேவேளை ஐரோப்பாவின் மிகப்பெரியதும் தற்போது ரஷ்ய ஆக்கிரமிப்பில் உள்ளதுமான சபோரிசியா அணுமின் நிலையத்தில் ஏற்பட்டிருக்கும் தீ தொடர்பில் உக்ரைன் மற்றும் ரஷ்யா பரஸ்பரம் குற்றம்சாட்டி வருகின்றன.

எனினும் உயர் கதிர்வீச்சு ஏற்பட்டிருப்பதற்கான எந்த அறிகுறியும் இல்லை என்று இரு தரப்பும் குறிப்பிட்டுள்ளது.

ஐ.நா.வின் அணு ஆயுத கண்காணிப்பு அமைப்பு, அந்த அணுமின் நிலையத்தில் இருந்து கடுமையான புகை வந்ததாகவும், அணுசக்தி பாதுகாப்பில் இதனால் எந்தவொரு தாக்கமும் இல்லை என்றும் தெரிவித்துள்ளது.

## சர்வதேச செய்திகள்

# காசா போர் நிறுத்த பேச்சை ஆரம்பிப்பதில் ஹமாஸ் அமைப்பு கண்டிப்பான நிலைப்பாடு

## இஸ்ரேலிய தாக்குதல்களில் மேலும் 25 பலஸ்தீனர் பலி

அமெரிக்கா, எகிப்து மற்றும் கட்டாரின் அழைப்பின் பேரில் காசா போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையை நாளை மறுதினம் (15) ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ள நிலையில், புதிய போர் நிறுத்தத் திட்டத்திற்கு பதில் முந்தைய போர் நிறுத்த திட்டத்தின் அடிப்படையில் இந்தப் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட வேண்டும் என்று ஹமாஸ் அமைப்பு மத்தியஸ்தர்களை கேட்டுள்ளது.

காசாவில் ஆட்சி புரியும் ஹமாஸ் அமைப்பு அதன் உத்தியோகபூர்வ டெலிகிராம் பக்கத்தில் வெளியிட்டிருக்கும் அறிவிப்பில், '(அமெரிக்க ஜனாதிபதி ஜோ) பைடனினால் மே 31 ஆம் திகதி முன்மொழியப்பட்டு ஐ.நா. பாதுகாப்புச் சபை தீர்மானத்தால் உறுதி செய்யப்பட்டு மே 6 ஆம் திகதி கட்டார் மற்றும் எகிப்து மத்தியஸ்தர்களால் முன்வைக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தை அமைய வேண்டும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஹமாஸ் அமைப்பு முன்னர் ஏற்றுக் கொண்டு இஸ்ரேலால் நிராகரிக்கப்பட்ட மே 6 இல் முன்வைக்கப்பட்ட திட்டத்தின்படி, காசாவில் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் கணிசமான பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்டு இஸ்ரேலிய சிறையில் உள்ள குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான பலஸ்தீன கைதிகள் விடுவிக்கப்படுவது உறுதி செய்யப்பட்டிருந்தது.

'ஆக்கிரமிப்பாளர்களின் (இஸ்ரேலின்) ஆக்கிரமிப்பை மூடிமறைக்கும் மற்றும் நமது மக்களுக்கு எதிரான அதன் இனப்படுகொலையைத் தொடர கூடுதல் கால அவகாசம் வழங்கும் பேச்சுவார்த்தைகள் அல்லது புதிய திட்டங்களைத் தொடருவதற்குப் பதிலாக இந்தத் திட்டத்தை (மே 6 முன்மொழிவு) மத்தியஸ்தர்கள் செயற்படுத்த வேண்டும்' என்று ஹமாஸ் அமைப்பு விடுத்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.



ஓகஸ்ட் 15 ஆம் திகதி போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க தமது தரப்பு பிரதிநிதிகளை அனுப்புவதற்கு இஸ்ரேல் இணங்கியுள்ளது. எனினும் ஹமாஸ் அமைப்பு பங்கேற்பது குறித்து இன்னும் உறுதி செய்யவில்லை.

எனினும் பைடனின் போர் நிறுத்தத் திட்டத்திற்கு இஸ்ரேல் புதிய நிபந்தனைகளை சேர்த்தது ஹமாஸ் தரப்பின் எதிர்ப்புக்கு காரணமானது. இதில் இடம்பெயர்ந்த பலஸ்தீனர்கள் வடக்கு காசாவுக்கு திரும்புவதற்கு அவர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றும் எகிப்துடனான காசா எல்லை பகுதி இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளையே இஸ்ரேல் முன்வைத்திருப்பதாக தெரியவருகிறது.

இந்நிலையில் காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்வதோடு தெற்கு நகரான கான் யூனிஸில் இருந்து மக்களை வெளியேற இஸ்ரேல் உத்தரவிட்டிருக்கும் நிலையில் அங்கிருந்து வெளியேறும் ஆயிரக்கணக்காக மக்கள் உணவு மற்றும் நீர் இன்றி வீதி ஓரங்களில் உறங்கி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் குறைந்து 25 பேர் கொல்லப்பட்டிருப்பதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதன்படி கடந்த 10 மாதங்களுக்கு மேற்பட்ட காலத்தில் காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 39,897 ஆக அதிகரித்துள்ளதோடு மேலும் 92,152 பேர் காயமடைந்துள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடக்கம் காசா மக்கள் தொகையில் 1.8 வீதமான மக்களை இஸ்ரேலிய படை கொன்றிருப்பதாக பலஸ்தீன மத்திய புள்ளிவிபர அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. இவர்களில் 75 வீதமானவர்கள் 30 வயதுக்கு உட்பட்டவர்கள் என்றும் அது கூறியது.

## ஈரானிடம் இருந்து பாரிய அளவிலான தாக்குதலை எதிர்பார்க்கும் இஸ்ரேல்

இஸ்ரேல் மீது பாரிய அளவான இராணுவ தாக்குதல் ஒன்றுக்கு ஈரான் தயாராகி வருவதாக அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் லொயிட் ஒஸ்டினிடம் இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கல்லன்ட் கடந்த ஞாயிற்றுக்கிழமை குறிப்பிட்டிருப்பதாக நெருக்கமான வட்டாரங்களை மேற்கோள்காட்டி எக்சோஸ் செய்தி இணையதளத்தின் செய்தியாளர் பராக் ரவிட், எக்ஸ் சமூகதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஒஸ்டினுடன் கடந்த ஞாயிறன்று தொலைபேசியில் பேசியதை இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் நேற்று உறுதி செய்துள்ளார். ஈரானின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கான நடவடிக்கை மற்றும் மூலோபாய ரீதியான ஒருங்கிணைப்பு மற்றும் இஸ்ரேல் இராணுவத்தின் தயார் நிலை தொடர்பில் ஒஸ்டின் மற்றும் கல்லன்ட் இருவரும் பேசியதாக இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.



டெஹ்ரானில் வைத்து ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மைல் ஹனியே கடந்த ஜூலை 31 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டதற்கு இஸ்ரேல் மீது பதிலடி வழங்கப்படும் என்று ஈரான் தொடர்ந்து கூறி வருகிறது.

இந்நிலையில் இஸ்ரேலை 'கடுமையாக தண்டிப்பதற்கு' ஈரான் உயர்மட்டத் தலைவர் அலி கமனெய் உத்தரவிட்டிருப்பதாக ஈரான் புரட்சிக் காவல் படை பிரதித் தளபதி ஒருவரை மேற்கோள்காட்டி உள்ளூர் செய்தி நிறுவனம் கடந்த வெள்ளிக்கிழமை குறிப்பிட்டிருந்தது.

## அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் மத்திய கிழக்கிற்கு விரைவு

ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா முன்னணி தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு எதிராக இஸ்ரேல் மீது பதில் தாக்குதல் நடத்த ஈரான் மற்றும் அதன் ஆதரவு போராட்டக் குழுக்கள் உறுதிபூண்டிருக்கும் நிலையில் அமெரிக்கா தனது ஏவுகணை நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றை மத்திய கிழக்கில் நிலைநிறுத்துவதாக அறிவித்துள்ளது.

கடந்த ஜூலை தொடக்கம் ஏற்கனவே மத்தியதரைக் கடல் பகுதியில் நிலைகொண்டிருக்கும் யு.எஸ்.எஸ். ஜோர்ஜிய நீர்மூழ்கிக் கப்பலை மத்திய கிழக்கிற்கு அனுப்ப அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் உத்தரவிட்டுள்ளார். நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றை நகர்த்துவது தொடர்பில் வெளிப்படையாக அறிவிப்பது அரிதான ஒன்றாக பார்க்கப்படுகிறது.

'இஸ்ரேலை பாதுகாப்பதற்கான அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கான அமெரிக்காவின் கடப்பாட்டை செயலாளர் ஒஸ்டின் வலியுறுத்தி இருப்பதோடு பிராந்தியத்தில் பதற்றம் அதிகரித்திருக்கு சூழலில் மத்திய கிழக்கு முழுவதும் அமெரிக்க இராணுவ படையின் நிலை மற்றும் திறன்களை வலுப்படுத்தும்படி குறிப்பிட்டார்' என்று அமெரிக்க பாதுகாப்பு தலைமையகமான பென்டகன் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.



இஸ்ரேலுக்கான பாதுகாப்பை பலப்படுத்த முயற்சிக்கும் அமெரிக்கா ஏற்கனவே மத்திய கிழக்கில் மேலதிக போர் விமானங்கள் மற்றும் போர் கப்பல்களை நிலைநிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஓகஸ்ட் மாதம் 13ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.